-313-

# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

-Page - 313.


| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 7<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ஹு ஐப்பசி மீ<br>அக்டோபர்—நவம்பர் '57 | வருட<br>சந்தா<br>ரூ. 2-4-0 |


ACC. NO. 18582.



அமணர் பல இன்னல்செய, முகக்கண் இலாத
தண்டியடிகள், அகக்கண் ஊக்கத்துடன்
திருக்குளத் திருப்பணிசெய்தல்

பெரியபுராணச் சித்திர விளக்கம் 43; பக்கம் 326

314

## உள்பொருள்

பக்கம்

1. அகஸ்தியர் முருகன் 5 (திருப்புகழ் மணி) ... 289
2. தண்டியடிகள் நாயனுர் (கி. வா. ஜகந்நாதன்) ... 291
3. அச்சுதர் (ரஸபதி) ... 294
4. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.)... 304
5. கீதை காட்டும் பாதை (அ. ராமமூர்த்தி) ... 310
6. ஊசியும் நூலும் (V.R.G.) ... 313
7. முனிவர் காட்டிய முதல்வன் (சி. குமாரஸ்வாமி) ... 315
8. முருகன் அருள் வடிவம் (ஆ. கி. ரங்கராஜன்) ... 321
9. வளையும் தளையும் (கி.வா.ஜ.) ... 326
10. "சொருபப் பிரகாச" திருப்புகழ் விரிவுரை (குகஶ்ரீ) ... 328
11. The world - mother (*Thiruppugal Mani*) ... 335

## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| மலர் 9 | ஹேவிளம்பி ௵ ஐப்பசி ௴<br>அக்டோபர்-நவம்பர்—57 | இதழ் 7 |
|---|---|---|


## அகஸ்தியர் முருகன்—5

(திருப்புகழ் மணி)

இருளகல காலையில் சூரியனை உதிக்கச் செய்வது முருகனும். மாலையில் சூரியன் அஸ்தமிக்க, மூண்டு வரும் இருளை அகற்ற சந்திரனெனும் மற்றொரு கோளத்தை உதிக்கச் செய்வதும் முருகன் அருள் என்றார் அகஸ்தியர். இதை அருணகிரியார் அநுபவிப் பதைப் பார்ப்போம்.

*பரவுநெ டுங்கதிர் உலகில் விரும்பிய*
*பவனி வரும்படி யதனாலே*
*பகர வளங்களு நிகர விளங்கிய*
*இருளை விடிந்தது நிலவாலே*
*வரையினி லெங்கணு முலவி நிறைந்தது*
*வரிசை தரும்பத மதுபாடி*
*வளமொடு செந்தமிழ் உரைசெய அன்பரு*
*மகிழ வரங்களு மருள்வாயே.*

சூரிய சந்திரர்களும் அவர்கள் பவனியால் ஏற்படுந் தன தானியங்களும் முருகன் பாத நன்கொடைகள்.

---

*நலந்தரு சித்தையராகி தாமணி மாலையினாலே*
*கலந்தவர் காதலில் வாழும் கற்குடி மாமலையாரே*

ஆகவே, அந்தப் பாதத்தைப் பாட, பக்தர்களுடன் கூடிய இகபர சௌபாக்கியங்களை வேண்டுகின்றார். அகஸ்தியர் முருகன் பாதாரவிந்தங்களில் சரண் புகுந்தார். ஒன்றாகக் கலந்தார். அந்த ஆனந்தத்தைப் பாடுகின்றார்.

*"ஓதிச் சரண் புகுந்தேன் குகன் என்னுள்*
*ஒன்றிக் கலந்துவிட்டான்; இனி*
*நீ துக்கம் நீங்கிடுவாய்—நினைப்பவை*
*நிச்சய மாகு மென்றான்—அவன்*
*போதித்த மெய்ம் மொழியால்—அருள்பரி*
*பூரண னாகிநின்றேன்—வளர்*
*சாதுக்கள் சங்கத்தினால்—ஜகந்தன்னில்*
*சாந்தி நிலாவுகவே."*

குருநாதன் போதித்த மெய்ம் மொழிதான் என்னவோ? "வெட்டாத சக்கரம் (தேகம்). பேசாத மந்திரம் (ஓம்). வேறு எவர்க்கும் எட்டாத புஷ்பம் (ஹ்ருதய புண்டரிக புஷ்பம்). இறையாத தீர்த்தம் (கண்ணீர்). இனி முடிந்து கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சு. கருத்தினில் முட்டாத பூஜை யன்றோ குரு நாதன் மொழிந்தது."

இவ்விதம் மொழிந்த சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார்கள் சிவயோகிகள். அவர்களே காலத்தை வென்றிருப்பார்கள். ஷண்முகநாயகன் தோன்றி விட்டால் கொடும் காலமும் காலனும் மாறிவிடும். மறைந்து விடும்.

பக்தன் பரிபூரணனாகி நித்யானந்தத்தில் நின்று விடுகின்றான். இந்த அற்புத உபதேசத்தை அகஸ்தியர் விளக்குகின்றார். ஆகவே ஷண்முக நாயகனைத் தோன்றிடச் செய்ய வேண்டும். இதற்குச் சுலபமான வழி என்னவென்றால் ஒரு ஊற்று எடுக்க வேண்டும்.

*ஏத்துயர் பத்தர்களை·பித்தர், இறைஞ்ச அவரிடர் எல்லாம்*
*காத்தவர் காமரு சோலை கற்குடி மாமலையாரே*

அதுதான் நாம ஸங்கீர்த்தன ஊற்று. அந்த ஊற்றிலே ஷண்முக நாயகன் எப்பொழுதும் தோன்றிடுவான்.

**நாம ஸங்கீர்த்தன ஊற்று**

*நாம பஜனமே ஜீவன்—முருகன் நாம பஜனமே
ஜீவன்
ஞான நலம் தரும் நாத லயம் தரும் நாம பஜனமே
ஜீவன்
சரவண பவகுஹ ஷண்முக நாமம்—சச்சிதானந்த
குரு நாமம்
முருக குருபர சிவசுத கௌரி—ஹ்ருதய அதிரஸ
அருள் தரு நாமம்
சகல லோக ஸம்மோஹன நாமம்—ப்ரம்மாதி சுரமுனி
சேவித நாமம்
பக்த கணப்ரியா புவனாகார—மங்கள பூரித
பூரண நாமம்
கர்ணாம்ருத பரிபாவன நாமம்—கார்த்திகேய
ஜகத் ரக்ஷக நாமம்
அற்புத நாமம் அருள்புரி [illegible]*

# தண்டியடிகள் நாயனார்

(கி. வா. ஜகந்நாதன்.)

திருவாரூரில் பிறந்தவர்கள் யாவருமே வழிபடுதற்கு உரியவர்கள், அதனால் தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்று பாடினார். அத்தகைய பேறு பெற்றவர்களுள் ஒருவராகிய தண்டியடிகள் நாயனார் புறக்கண் இல்லாதவராயினும் அகக் கண்ணில் எப்போதும் இறைவன் திருவடியைக் கண்டு இன்புறும் இயல்பு பெற்றிருந்தார். நாள் தோறும் ஆரூர் எம்பெருமானை வணங்கிப் பஞ்சாட்சரத்தைச் செபித்துக் கொண்டே சென்று வருவார்.

---

வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங் காட்டு எம் அடிகளே

கோயிலின் மேற்கே உள்ள குளத்தைச் சுற்றிலும் அக்காலத்தில் சமணர்கள் மடங்களைக் கட்டிக்கொண்டார்கள். வரவரக் குளத்தின் அளவு குறுகிக்கொண்டே வந்தது. அதனை அறிந்த தண்டியடிகள் நாயனார், "இந்தத் திருக்குளத்தை அகழ்ந்து பெருகச் செய்ய வேண்டும்" என்று முடிவு பண்ணி, அதற்கு ஆயினவற்றைச் செய்யத் தொடங்கினார். அங்கங்கே அடையாள முளை நட்டுக் கயிறு கட்டி நடு இடத்தைக் கையாலே தடவிப் பார்த்து மண் வெட்டியால் வெட்டி மண்ணைப் புறத்தே கொட்டி மறுபடியும் வெட்டுவார். இந்தத் தொண்டு செய்யும் போது திருவைந்தெழுத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தார்.

அவர் குளத்தின் அளவைப் பெருக்கும் பொருட்டுத் தோண்டுவதைக் கண்ட சமணர்களுக்கு அவர் செயல் பொறுக்கவில்லை. அவரை யணுகி, "மண்ணைத் தோண்டினால் இங்குள்ள பிராணிகள் இறந்துபடும்; அவற்றைத் துன்புறுத்த வேண்டாம்" என்றார்கள்.

அது கேட்ட தண்டியடிகள், "உண்மை யறியாதவர்களே, திருநீற்றைச் சாந்தாகப் பூணும் எம்பெருமானுக்கு உரிய திருப்பணி அல்லவா இது? இது மிகச் சிறந்த அறமென்பதை நீங்கள் அறிய முடியுமா?" என்றார்.

அதனைக்கேட்ட சமணர், "நாங்கள் எடுத்துச் சொல்லும் தருமத்தை நீ காதில் வாங்கிக் கொள்ளவில்லை. காதையும் இழந்தாயோ?" என்று கேட்கத் தண்டியடிகள், "மந்தமான அறிவும் காணாத கண்ணும் கேளாத செவியும் உங்களுக்குத்தான் உள்ளன. நான் இறைவன் திருவடிகளையே காண்கின்றேன் அன்றி மற்றவற்றைக் காண்பதில்லை. மற்றவர்களைப் போல நான் எல்லாப் பொருளையும் காண வல்லேன் ஆனால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட சமணர்கள், "உன்னுடைய கடவுள் அருளால் நீ கண் பெற்றாயானால் நாங்கள் இந்த ஊரில் இராமல் ஓடிப் போகிறோம்" என்று சொல்லி, அவர்

---

வணங்கும் சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்தும் கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங் காட்டு எம் அடிகளே

கையில் இருந்த மண் வெட்டியைப் பறித்துக்கொண்டு, முளைகளையும் கயிற்றையும் எடுத்து எறிந்தார்கள்.

அதனை உணர்ந்த தண்டியடிகளுக்குக் கோபம் மூண்டது. அவர் எம்பெருமான் சந்நிதியில் வந்து வணங்கி, "எம் பெருமானே, இன்று சமணர்கள் என்னை அவமானம் செய்து விட்டார்களே! இந்தப் பழிதீர அருள வேண்டும்" என்று நைந்து அடி வீழ்ந்தார். பின்பு தம் திருமடத்துக்குச் சென்று இரவு தூங்குகையில், இறைவன் எழுந்தருளி, "நீ மனக் கவலையை ஒழி. உன் கண் திறக்கவும் சமணர் விழி மங்கவும் காணப் போகிறாய். அஞ்ச வேண்டாம்" என்று அருளி மறைந்தான். அப்பால் அன்று இரவே அரசனுடைய கனவில் தோன்றி, "தண்டியடிகள் நமக்குக் குளந்தோண்டுவதைச் சமணர்கள் சகிக்காமல் இடையூறு செய்கிறார்கள். நீ அங்கே போய் அவன் கருத்தை நிறைவேற்று" என்று சொல்லி மறைந்தான்.

உடனே அரசன் எழுந்து தண்டியடிகள் நாயனாரிடம் சென்று பணிய அவர் எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்துரைத்தார். சமணர் கூறியதையும், தான் கண் பெறுவதாகச் சொன்னதையும், அப்போது ஊரை விட்டே ஓடுகிறோமென்று அவர்கள் கூறியதையும் சொன்னார்.

அரசன் சமணர்களை அழைத்து விசாரித்தான். அவர்கள் முன் சொன்னதையே சொன்னார்கள். அரசன் யாவரையும் அழைத்துக் கொண்டு குளத்தை யடைந்தான். நாயனாரை நோக்கி, "கண்களைத் திருவருளால் பெற முடியும் என்பதைக் காட்டும்" என்றான்.

தண்டியடிகள் உடனே எழுந்து, "நான் சிவனுக்கு அடிமையானது உண்மையானால் இன்று நான் கண் பெற வேண்டும்; இங்குள்ள சமணர் கண்ணை இழக்க வேண்டும்" என்று கூறி அஞ்செழுத்தை ஓதிக் குளத்தில் மூழ்கினார்.

இறைவனைத் தொழுதபடியே அவர் நீரிலிருந்து எழுந்தபோது அவருக்குக் கண்ணொளி கிடைத்துவிட்டது. அதே சமயத்தில் சமணர்கள் கண் ஒளியை இழந்தார்கள்.

---

ஆகம் ஆர்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே

மன்னன், சமணர்கள் முன்னே கூறிய உறுதிமொழிப்படி அவர்களை ஊரை விட்டு ஓடச் செய்தான். அவர்கள் வெவ்வேறு இடங்களுக்குப் போய் விட்டனர். சமணர் மடங்கள் இருந்த இடங்களில் அவற்றை இடித்துக் குளத்தை விரிவாகச் செய்து தண்டியடிகளை அடிபணிந்தான். அப்பெரியார் கண் பெற்ற பயனாக இறைவனைத் தரிசித்து எப்போதும் அஞ்செழுத்தை ஓதி இன்புற்று இறுதியில் சிவபெருமான் திருவடி நீழலில் ஒன்றினார்.

---

<u>தேவி தாஸர்கள் 19</u>

# அச்சுதர்

## (ரஸபதி)

ஐந்தாம் வேதம் பாரதம். பாரத காரண கர்த்தர்கள், பாண்டவ கௌரவர். அவர்கள் ஆண்ட குருக்ஷேத்ரத் தலைநகர் அஸ்தினபுரம். அதன் அண்மையில் உளது தனேஷ்வரம். அதைச் சார்ந்தது அனுஜை எனும் கிராமம்.

வாய்மை வாழ்க்கையர் ஒருவா, அவ்வூரில் வாழகிறார். அவர் பெயர் அச்சுதர். தனேஷ்வரததில் கோயில் கொண்ட தனேஸ்வரியை, அவர் உவகையுடன் பல காலம் உபாஸித்தார். நாவில் அத்தேவியின் நாமம். இதயத்தில் எம்பிராட்டி திருவுருவம். பேஷ் பேஷ். அதன் பயனாக, பெரும் செல்வம் பெற்றார். கலை ஞானமும், அவர்க்குக் கைவந்தது.

ஒரு நாள் இரவு. விடியற்காலம். மணி நான்கு. மங்களகரமான ஒரு மங்கை, இனிய புன்னகை செய்து அவா எதிர் நின்றாள்.

அச்சுதரே! கலைசிறந்தவர் நீர்; வாழவிப்பவர் என்று நம்பி வந்தேன். உள்ளது உள்ளபடி, என் எண்ணத்தை, உரைக்கலாமா?

வந்தவளுடைய வாக்காலும், நோக்காலும் வசீகரிக்கப் பெற்ற அச்சுதர், வழக்கப்படி வணக்கம் செய்தார். தாயே! என்ன செய்ய வேண்டும் அடியேன்? தாங்கள் யார்?

நான் இருப்பது தனேஷ்வரம் என் பெயர் காமாட்சி. குணம் சிறந்த உம் ஊரில், சில நாள் குடியிருக்க விரும்புகிறேன்.

---

*நல்லவாறே உன்றன் நாமம் நாவில் நவின்று ஏத்த*
*வல்லவாறே வந்து நல்காய் வலிவலம் மேயவனே*

ஒரு வீடு கட்டிக் கொடுப்பீரா? எங்கும் இருப்பேன். இருந்தாலும், நல்லவர்கள் கட்டி வைத்த வீட்டில், வீறுகொண்டு இருக்க வேண்டும்! இப்படி எனக்கு ஒரு ஆசை.

அம்மா! வீடு, மாடு, தோட்டம், துரவு முதலியவை, மாயையின் விவகாரம்; எனது இவை என்று எண்ணுவது மமகாரம்.

அச்சுதரே! உமக்கு மட்டும் இவ்வூரில் ஒரு மாளிகை. எனக்கு என்று கேட்டால், வேறு போக்கான வார்த்தை, தனக்கு ஒரு நியாயம்; மற்றவர்க்கு ஒரு செய்தி. என்ன உலகமோ இது?

ஹஹ்ஹாஹா! ஹஹ்ஹாஹா! இப்படிக் கனத்து நகை செய்தாள் அக்காரிகை. மின்னியது மேனி. பளபளத்த பசுமை ஒளி, மாபெரும் விண்ணில் எழுந்தது மறைந்தது.

அதிர்ந்தது இதயம். வியர்த்தது உடல். அதிசயித்துக் கண் விழித்தார் அச்சுதர்.

என்ன அற்புதமான கனவு! தனேஸ்வரீ! தாயே! அம்பா! கோயில் இல்லா ஊரில்தான், நான் குடியிருக்கிறேன். தனேஷ்வரத்திற்கு வந்து, சேவித்துத் திரும்புகின்ற எனக்கு, இவ்வூரில் ஒரு கோயில் எழுப்பும் எண்ணமே உண்டாகவில்லை. தப்புதான். மன்னிக்க தாயே! என்று, இதயம் அதிர அலறினர்.

அழகும் அறிவும் அமைதியும் உடையவள் அவர் மனைவி. நியதி நிறைந்த அந்த நீலாட்சி, கணவர் அலறல் கேட்டுக் கண் விழித்தாள.

ஸ்வாமி! என்ன செய்தி? ஏன் இப்படி நடுக்குகிறது திருமேனி. ஐயோ! வியர்த்துக் கொட்டி யிருக்கிறதே!

நீலா! தனேஷ்வரிக்கு, இவ்வூரில் ஒரு கோயில் வேண்டுமாம். கட்டளை யிடுகிறாள அந்தக் ககன வடிவி. கனிந்துரைத்து, கலகல என்று இன்பக் கண் மழை பொழிந்தார் அச்சுதர்.

மறு நாளே, மும்முரமாக அத் திருப்பணியில் முயன்றார். ஊர் நடுவில் இடம் கண்டார். ஸ்ரீ காமாட்சி திருக்கோயில் என்று அவர் அமைத்த ஆலயத்தில், பலலாயிரக் கணக்கான பக்தர்கள், வந்து வந்து வரத தேவியை வழிபடுகின்றார்கள்.

அம்பிகே! அடியேன் இப்பணி செய்ய வழி செய்த உன் அருளுக்கு, வணக்கம் என்று வாழ்த்தினர்.

இவர் போக்கு இது.

---

தயங்கு சோதி! சாம வேதா! காமனைக் காய்ந்தவனே!
மயங்குகின்றேன், வந்து நல்காய் வலிவலம் மேயவனே

தம்பதிகட்கு, இன்பு தரும் மக்கள்பேறு இல்லை. நீலாட்சி இதயம், இதை இடையிடை நினைத்தது. அது குறித்து, எண்ணும் போது கண்ணீரும் கம்பலையும் ஆயினள்.

அதை அச்சுதர் அறிந்தார். பகபக என்று நகைத்தார். அகில உலகும் அன்னை மயம். மாபெரும் தேவி, ஒரு மகவை அருளவள; வீணை கவலையை விடு! ஆறுதல் கொள்!

பரசிவை பக்தர்கள் பாதம்பட, இவ்வுலகம் பாக்கியம் செய்தது. நீலாட்சி! தூய அந்த அடியவர்கட்குத் தொண்டு செய்!

உரைப்பதும் நினைப்பதும் ஒன்றாகி, நினைவு நிரம்ப அடியவாக்கு நிதி கொடு! உதரம் குளிர, அவர்கட்கு உணவையளி! நின் நினைவு ஒரு நாள் நிறைவேறும் என்று, உள்ளம் உருக அச்சுதர் உரைத்தார்.

அன்று முதல் நீலாட்சி, அதே கைங்கர்யத்தில் ஆர்வம் செலுத்தினள. இனிப்பு உவர்ப்பு; கார்ப்பு கைப்பு; துவர்ப்பு புளிப்பு; இப்படி அறுசுவை. நக்கல் பருகல்; உண்ணல் தின்னல் என்னும் நால்வகை உணவுகள், சிறக்க நாள்தோறும் சித்தம் ஆயின.

பக்தர்கள் வந்தனர். பசி ஆறினர். வாசியான ஆசி உரைத்தது வாய்; வயிறும் குளிர்ந்து வாழ்த்தியது. அடியவர் ஆசியும், காமாட்சி யருளும், அவளில் ஒன்றிக் கலந்தது. அதன் பயனாக, கருப்பம் வாய்த்தார் காரிகையார். காலத்தில், சுப ஓரையில், ஒரு மகவைக் கருவுயிர்த்தார்.

பிறந்த பெண் குழந்தைக்கு, அச்சுதர், ஞானம் என்று பெயரிட்டார். குழந்தை இல்லை என்ற குறை தவிர்ந்தது. நல்லற இல்லறம் நடந்தது. இப்போது மகட்கு வயது ஏழு.

காமாட்சி கோயில் திருப்பணி; உவந்து பக்தர் கட்கு நிதி உதவல்; மாபெரும் அடியவாக்கு மகேச பூஜை; இப்படி நலம் சிறந்த செயல்கள் நடைபெறலாயின. விமல தேவியின் சோதனையும், விரும்பி வந்து விளையாடியது.

பணத்தைக் கருதி, பலர் பக்தர்கள் ஆயினர். போலிகள் பலர் பொங்கி எழுந்தனர். வந்தவர் வந்தபடியே இருந்தனர். எனினும், கொடுக்கும் கொடைநடை குன்றியது இல்லை.

" துஷ்பாத்ர தாதேன புனர் தரித்திரஹ :"

இது அனுபவ மொழி. இப்படிப் பாத்திரம் அற்றவர்க்கு உதவிய பயனே என்னவோ! யார் அறிய முடியும்? கனத்த செல்வம்

---

கண்டு கண்டே யுன்றன் நாமம், காதலிக்கின்றது உள்ளம்
வண்டு இண்டி பாடும் சோலை வலிவல மேயவனே

வர வரக் கரைந்து கரந்தது. முடிவு என்ன? வர வர தம்பதிகளிடம், வறுமை வளர்ந்தது. வீடு, தோட்டம், நன்செய், புன்செய், பொன் அணி, நவமணி முதலியன, போன இடம் தெரியாது போயின. குடிசையில் புகுந்தது குடும்பம். வறுமையின் ஆட்சி, கோர தாண்டவம் செய்து கொக்கரித்தது.

பலருடைய பசியாற்றிய இவர்களை, இன்று குடைகிறது பசி. தாங்க முடியவில்லை. மானாபிமானத்தை மறந்தனர். கண்டவர் இடத்தில் கடன் கேட்டனர். ஒருவரும் உதவிலர். உறவினர் பலர் உளர், வாழ்ந்தாலும் பொறார்; தாழ்ந்தாலும் தாங்கார். இது, வையகத்துச் சாக்கடைக்கு வழக்கம்.

ஐயோ! இப்போது என்ன செய்தி? தர்ம பத்தினியும், ஞானமும் தாமுமாக, மூன்று நாளாகப் படுபட்டினி. அட பாவமே!

என்ன செய்வது? ஆலோசித்தார் அச்சுதர். நெல் களம் சென்றார். அங்குச் சிந்திக் கிடந்த நெல்களை, நெடுநேரம் பொறுமை காட்டிப் பொறுக்கினார். படி அளவிற்குச் சேகரித்தார். குதூகலித்தது மனம். கொண்டு வந்தார். நீலாட்சியிடம் கொடுத்தார்.

உவகை பெருகிய நீலாட்சி, அதை உரலில் இட்டுக் குத்தினள். உமியும் தவிடும் ஒதுக்கினள். இழும் இழும் என்று இருந்தது அரிசி. நீரில் இட்டாள். கற்களைக் களைந்தாள். பக்குவமாகச் சமைத்தாள். உப்பிட்டு நீரிட்டு உண்ணலாம்; இந்தத் தைரியம் பிறந்தது. ஸ்வாமி! சமயல் ஆயிற்று என்று, களைத்திருந்த கணவர்க்கு, சமிக்ஞை காட்டினள்.

உடனே எழுந்தார் அச்சுதர். நீராடினார். நித்திய கர்ம அநுட்டானத்தை நிறைவேற்றினார். பயன் தரும் பாடல்களைப் பாராயணம் செய்தார். வழக்கம் போல், ஸ்ரீ காமாட்சி கோயிலுக்கு வந்தார். வரத தேவியை வணங்கினார்.

வாழ்க தேவி உன் ஆலயம்! வளர்க அம்பா உன் வாய்மை அருள் என்று, போற்றி வணங்கிப் புளகித்தார். தன்னை மறந்தார். பரசிவையில் உணர்வு பதிந்தது.

பிறகு எழுந்தார். வீடுநோக்கிப் புறப்பட்டார்.

அப்பா! அப்பா!

யார் அது? அடடே! ஞானமா! எப்படியம்மா நீ இவ்வளவு தூரம் வந்தாய்? வா வா வீட்டிற்குப் போகலாம்!

---

நைவன் நாயேன்; உன்றன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன்
வையம் முன்னே வந்து நல்காய் வல்வல மேய்வனே

இப்போது முடியாது அப்பா! கால் வலிக்கிறது; கடும் பசி காதடைக்கிறது. ஒரு அடிகூட நடக்க, என்னால் முடியவே முடியாது.

நான் தூக்கிக் கொள்கிறேன்; வீட்டிற்குச் சீக்கிரமே போய் விடலாம் அம்மா!

பார் அப்பா, இரு பாதங்களும் எப்படிக் கொப்புளித்திருக்கிறது? அசதி அதிகரிக்கிறது. படபடக்கும் வெய்யிலைப் பார்க்கவே பயமாயிருக்கிறதே!

பசிக்கிறது என்று, அப்போதே அம்மாவைக் கேட்டேன்; அப்பா வந்த பிறகுதான் என்றாள். களைப்பாக இருந்தது; உம்மை அழைத்துப் போகலாம் என்று ஓடி வந்தேன்.

நீர் போம்! என்னால் நிற்கக் கூட முடியவில்லையே; கால் தள்ளாடுகிறதே! ஒரு வாய் அன்னம் கொண்டு வாரும்! ஐயோ! அம்மா! அப்பா! என்று, மண்டபத்திலேயே படுத்து விட்டாள் அந்தப் பாவை.

பாழும் மூன்று நாட்களாகப் பட்டினி. எப்படிச் சகித்தாளோ குழந்தை. நினைக்கிற போதே, கண்கள நீரைச் சிந்தின. சமயல் தான் ஆகி யிருக்கிறதே! அவள் உள்ளம் போல், உணவை, இங்கே தான் கொண்டு வந்து ஊட்டினால் என்ன? உருகிய மனம், அப்படியெல்லாம் உணர்ந்தது.

பத்திரமாக இரு அம்மா! உன் சொற்படி, இங்கேயே கொண்டு வருகிறேன் என்று, ஓட்டம் பெருநடையாய் ஓடினார். வீட்டுக்குள் நுழைந்தார். நாற்புறமும் பார்வையைச் செலுத்தினார்.

நீலாட்சி எங்கே? பாவம் பாவம். பசியால், அவள் களைத்துப் படுத்திருக்கிறாள். பார்த்த மனம் பதைத்தது. எழுப்ப வேண்டாம் என்று எண்ணினார்.

வேறு பரிகலம் தேடி, அதில் எடுத்துச் சோற்றை யிட்டு, கொண்டு போக நேரம் ஆகும். அதனால், சமைத்திருக்கும் பாத்திரத்தையே எடுத்தார்; ஒரு செம்பில் தண்ணீர் கொண்டார், உள்ளங்கை அளவு உப்பை அள்ளினார்.

காலம் தாழ்த்தால் களைப்பு மிகுமே. நினைவு இது, அவர் நெஞ்சத்தை நெருடியது; குழந்தைக்கு ஏதேனும், போவதற்குள்... நினைக்கிற போதே, துடித்த இதயம் வெடித்து விடும்போல் இருந்தது.

---

நஞ்சை உண்டாய்க்கு என் செய்கேனோ? நாளும் நினைந்து அடியேன்
வஞ்சம் உண்டென்று அஞ்சுகின்றேன் வலிவல மேயவனே

மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடினார். சோர்ந்த ஞானம், படுத்த இடத்திலேயே கிடக்கிறாள். மகளை எடுத்தார். மடிமேல் கிடத்தினார். தண்ணீரை முகத்தில் தெளித்தார். மேல் ஆடையால், மெல்ல விசிறினார்.

கடும் பசியின் களைப்போ? அல்லது கண்ணுறக்கு ஒன்றோ? கண்ணே! ஞானம்! கண் திறக்க மாட்டாயா? முகம் நோக்கிக் குழறியது மொழி. முத்துப் போல் அரும்பிய முகத்து வியர்வையைத் துடைத்தாரே தவிர, அவள் முகத்தைத் தன் நலம் சிறந்த கண் மழையால் நனைத்தார்.

கண்ணீர்த் துளிகள், சுறீல் சுறீல் என்று கன்னத்தில் பட்டதும், மெல்லக் கண் திறந்தாள் ஞானம்.

கண் திறந்தாயா! வயிற்றில் பாலை வார்த்தாயா! எழுந்திரு அம்மா! இதோ சோறு என்றார்.

முகிழ்த்தது நகை. மலர்ந்தது முகம். அன்னத்தை உப்பிட்டு நீர் விட்டுப் பிசைந்தார். உருட்டி வாயில் ஊட்டினார்.

அப்பா!

என்ன அம்மா!

இதைப்போல் சுவையான அன்னத்தை, ஒருநாளும் நான் உண்டதே இல்லையே! எந்நாளும், அம்மா, இப்படிச் சமைத்ததே இல்லை. மதுரமாக இருக்கிறது அப்பா!

சுவைத்து விழுங்கி, இப்படி மென் குரலால் சொன்னாள். சொல்லிக் கொண்டே, கொண்டு வந்த சோறனைத்தும் உண்டாள்.

உப்பிட்ட சோறும் கீருமா சுவையா யிருக்கிறது? நம் கையால் ஊட்டுவதால் இப்படி உணர்கிறாளா?

சரி அம்மா. நாளைக்கும் இப்படியே சமைக்கச் சொல்லலாம்; இனி வீட்டிற்குப் போகலாமா?

அப்பா! அம்மா, வேறு ஒரு பாண்டத்திலும் சமைத்து வைத்திருக்கிறாள். அங்கு வந்து விட்டால், அதை எனக்கு அளிக்க மாட்டாள். நீ போய், அதையும் கொண்டு வா அப்பா! உண்டபின், வீட்டிற்கு உம்மோடு வருகிறேன்!

என்ன வியப்பு! மகளையா தாய் வஞ்சிப்பாள்? அங்கு வந்து உன்னை அஞ்சுகிறாளே ஞானம்! அங்கலாய்த்தது மனம்.

---

கரியுரிப்பாய்! சாலைகளே! மணி பீடத்து
வரி யரவா! வந்து நல்காய் வலிவல மேயவனே

சரி. இங்குதான் நீ இரு. அதை, நானே கொண்டு வருகிறேன் என்று நகைத்தார்; விறு விறு என்று விரைந்தார்.

வீட்டுக்குள் புகுந்தார். மீனாட்சி! என்று கூவினார். நாயகர் குரல் கேட்ட நாயகி, ஏன் என்று குரல் கொடுத்து எதிர் வந்தாள்.

முதல் சமைத்ததை ஞானம் உண்டாள். பசி அடங்கவில்லை. பாவம். இன்னும் சோறு வேண்டும் என்கிறாள். வேறு சமைத்தது எங்கே?

உண்டாளா? என்ன சொல்கிறீர்கள்? எங்கே ஞானம்?

கோயில் மண்டபத்தில் குந்தி யிருக்கிறாள். என்ன விறைத்துப் பார்க்கிறாய்! உனக்கும் பசிதான்; வேறு வழியில், நம்பசி தீர முயற்சிக்கலாம்: சமைத்ததை, எங்கு வைத்திருக்கிறாய்? அதையேனும் சொல்!

உன் குழந்தைக்கு, நீ ஊட்டி யிருக்க வேண்டும்; அடர்க்கும் பசியை, அவளால் அடக்க முடியுமா? உள்ளங் கால்கள் கொப்புளிக்க, என்னைத் தேடியல்லவா வருத்தும் வெய்யிலில் வந்திருக்கிறாள்!

என்ன இது? என்ன என்னவோ சொல்கிறீர்களே! ஞானம் இங்கே அல்லவா தூங்குகிறாள்!

சீ! குழந்தையைப் போல், என்னையும் எண்ணி ஏய்க்காதே! அங்கே இருக்கிறாள் என்கிறேன்; இங்கே தூங்குகிறாள் என்கிறாய்!

நான் பொய்யா சொல்கிறேன்.

ஆம், பொய்யே பொய்!

களைப்பு மிகுதியால், அறிவு கலங்கி யிருக்கிறாரா? ஐயுற்றது மனம். கணவர் கையைப் பிடித்தாள். இழுத்துச் சென்றாள். அடுத்த அறை. பாயில் ஞானம். நல்ல நித்திரை.

அச்சுதர் மனம் திடுக்கிட்டது! ஞானம் என்று மெல்லத் தட்டினார். எழுந்தது ஞானம்.

மண்டபத்தில் இருந்த நீ, என்னை யறியாமல் எப்படி யம்மா இங்கு வந்தாய்?

மண்டபத்திலா? என்னையா பார்த்தீர்கள்? போ அப்பா! பொய் சொல்கிறீர்!

நீ வா அம்மா! பசிக்கிறது; சோறு போடு என்று, கொஞ்சினாள் அன்னையிடம் குமரி.

ஞானம்! இப்படி வா! உனக்கு நான், அங்கு சோறு ஊட்டவில்லையா?

---

ஆயமாய காயம் தன்னுள், ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் வரிவள மேயவனே'

அம்மா! அப்பா எவ்வளவு பொய் சொல்கிறார் பார்த்தாயா? சோறு கண்டு மூன்று நாளாயிற்றே அப்பா! என்று விக்கி அழ ஆரம்பித்தாள் மகள்.

மூன்று பேர்க்குச் சமைத்ததை, ஒருத்தியாக இவளே உண்ண முடியுமா? பிடி சோறு இருந்தால், குழந்தைக்குப் போதுமே! எங்கே தாங்கள் கொண்டுபோன பாத்திரம்? கேட்டுக் கொண்டே நீலாட்சி, சமையல் அறைக்குள் நுழைந்தாள். தந்தையும் மகளும் தொடர்ந்தனர்.

பாத்திரம், சமயல் இடத்தில் பத்திரமாக இருந்தது. அதன் மேல் இருந்த தட்டை அகற்றினாள். பாத்திரம் நிறைய அன்னம்.

பாத்திரத்தில் சமைத்த சாதம், பாதிதானே இருந்தது? இப்போது நிறைய இருக்கிறதே! ஆச்சர்யமாக அல்லவா இருக்கிறது? நெடுமூச்சு விட்டாள் நீலாட்சி.

பார்த்தார் அச்சுதர். உணவை ஞானத்திற்கு ஊட்டிய பிறகு, வெற்றுப் பாத்திரம் அல்லவா கொண்டுவந்து வைத்தேன்! இதில் அன்னம் நிறைய இருக்கிறதே! நனவா கனவா நான் காண்பது?

பெருகியது பீதி. ஓங்காரீ! ஆங்காரீ! இப்படியும் ஒரு ஆடலோ தாயே! என்று, கூவியபடி கோயில் நோக்கி ஓடினார்:

மண்டபத்தில் இருந்த மகள் எங்கே?

நீலாட்சி ஒருபால்; ஞானம் ஒருபால்; நடு இருந்த அச்சுதர், திகைப் பூண்டு மிதித்தார் போல், ஒன்றும் தோன்றாமல் நின்றார்.

கனிவு நிறைந்தவர் தன் கணவர்; அவர் காமாட்சி தாஸர். பலநாள் பட்டினி; அதன் பயன்தான் இந்தக் குழப்பம்; மருண்டதோ அவர்மதி? என்று, நீலாட்சி குமுறி மழுது குலுங்கினாள்.

என்ன அப்பா இது? ஏன் ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள்? என்று, கையைப் பிடித்து ஞானம் கதறுகிறாள்.

எங்கே இருக்கிறோம் நாம்? ஏன் இவர்கள் அழுகிறார்கள்? அந்த ஞானம் எங்கே? இந்த ஞானம் யார்? பிரமிக்கிறார் அச்சுதர்.

அச்சுதா! நீ மூன்று நாளாக முழுப் பட்டினி. எனக்கு அந்த நாளில், நீ எதையும் நிவேதிக்கவில்லை. அந்நாளில் உன்போல் நானும் பட்டினிதான். மேலிட்ட களைப்பால், இறக்க இன்று நிவேதனம் செய்ய மாட்டாய்; அதை முன்கூட்டி அறிந்தேன். மகள் உருவில் வந்தேன். பெற வேண்டியதைப் பெற்றேன். இன்று முதல்

---

தேரோடும் போய் வீழ்ந்து அலற, இராவணனைத் திருவிரலால் அடர்த்த வாரோடுங் கொங்கை பங்கர் வலிவல மேயவனே

உனக்கு ஒரு குறையும் இல்லை! அம்பிகை சந்நிதியில் இருந்து, இப்படிப் பெருகிய ஒலியாய் அசரீரி பிறந்தது.

ஆ! அப்படியா செய்தி? அம்பா! அம்பிகே! அன்ன பூரணி! இன்று என் கையால் அன்னம் ஏற்றாயா? தேவ தேவீ! என்று வீறிட்ட அச்சுதர், இன்பக் கண்ணீரை சந்நிதியில் இறைத்தார்.

மாதேவீ! உன் குழந்தைகள் நாங்கள். சிற்றடியேம் ஆன எங்கள் இடத்தில், வழுக்கள் பிறவாதபடி வந்தாய்; தனி வாழ்வு தந்தாய். உன் இளங் கோலம் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவியோ நான்? என்று, நெடுங் கண்ணீர் சிந்தினள் நீலாட்சி.

என் அம்மை என் உருவில் வந்தாயா? என்போல் வார்த்தை தந்தாயா? என் ஆத்மா இனி யீடேறும்; சிற்பரீ! தற்பரீ! என்று, ஞானம் அழுது தொழுது ஆநந்தித்தாள்.

மூலத்தான முதல்வியைத் தொழுதனர். வீட்டிற்குத் திரும்பி னர். தேவி தந்த பிரஸாதம் என்று, பாத்திரத்தில் இருந்த உணவை, உவந்து மூவரும் உண்டனர்.

இரவு மணி இரண்டு. யாரோ தட்டி எழுப்பியது போல் இருந்தது. தாயும் மகளும் தந்தையும் விழித்தனர். பெட்டியின் மேல், பளபள பளபளா.

என்ன அது? இரவில் அறிய இயலவில்லை. அஞ்சி யிருந்தனர். பொழுது விடிந்தது. அணுகி நோக்கினர். மதிக்கத் தக்க மாணிக் கம். ஆம். ஆம். இது, அம்பிகை செய்த அருள் என்று அறிந்தனர்.

இதை மதிப்பிட்டு, உரிய பணத்தை உதவ முடியுமா ஐயா! என்று, அதைக் கனிவுடன் அச்சுதர் வர்த்தகரிடம் காட்டினர்.

ஐந்து வராகன் என்றார் ஒருவர். மூன்று என்றார் வேறு ஒருவர். எட்டு என்றார் ஒரு புத்திசாலி. நான்கு வராகன் நல்கு வம் என்றார், இலக்கியமாகப் பேசக் கற்ற கடைக் குமாஸ்தா ஒருவர்.

ஹூம் என்று உறுமல். திடுக்கிட்ட அனைவரும் திரும்பி நோக்கினர். கடை முதலாளி மேல், ஆவேசித்தார் காமாட்சியார்.

ஹாம்! ஹீம்! ஹூம் என்று, துள்ளி விழுந்து அவர் துடியாய்த் துடித்தார்.

ஏடா! உள்ளபடி மதித்தாயா! உரைத்த விலை சரிதானா?

---

ஓதி நாளும் உன்னை எத்தும் என்னை, வினை யவலம்
வாதியாமே வந்து நல்காய் வலிவல மேயவனே

உறுமல் கனத்தது. பற்களைக் கடிப்பதைப் பார்த்து, வணிகர் அனைவரும் பயந்தனர்.

பதினாயிரம் வராகன் என்று, ஒருசேர யாவரும் உரைத்தனர்.

ஆம். என் பக்தன் அச்சுதன். என்றும் உலகம் அன்பர்களை ஏமாற்றலாம்; உங்கட்கு அது சுலபமாகவும் தோன்றலாம். கண் காணிக்க நான் இருக்கிறேன்; கடைப்பட்ட நிலையர், அதைக் கடைசி நாளில் காண்பர் காண்! என்று, அலறி மலையேறியது ஆவேசம்.

பளபளத்த மாணிக்கததின் மதிப்பு, பதினாயிரந்தான். ஆனாலும், ஸ்வாமி! இந்த மாணிக்கம், தங்களிடமே இருக்கட்டும். தனியே பதினாயிரம் தருகிறேன் என்றார் ஒருவர். அவரைப் பின்பற்றி, பலர் பதினாயிரம் பதினாயிரம் என்று, அன்பர் அச்சுதரிடம் அளித்தனர். அம்பிகை வாக்கால், அச்சுதர்க்கு மதிப்பு, நாட்டில் இப்படி அதிகரித்து விட்டது. பதினாயிரம் பதினாயிரம் என்று, வந்த பணம் வநதபடியே யிருக்கிறது.

அதைக் கண்ட அச்சுதர்க்கு, மூண்ட சிரிப்பை அடக்க முடியவில்லை.

அம்பா! உன் ஆடலே ஆடல். என்னை இதுவரை ஏறெடுத்தும் பாராத வணிகர், உவந்து போட்டியிட்டு உதவச் செய்கிறாய்!

தாயே! உன் மூலம் வந்த பணம், உன் கோயிலுக்கே உரியது. மாயா உலகில், இவைகளைக் கண்டு, மயங்குபவன் நான் அல்லன் என்று, ஏத்திப் போற்றி இறைஞ்சினார். கை வந்த பணத்தை யெல்லாம், காமாட்சி ஆலயததிற்கே காணி யாக்கினார்.

நில புலங்களை வாங்கினார். நித்திய நைமித்திக விழாக்கட்கு வழி செய்தார். கோயில் பிரஸாதத்தால், குடும்பத்தின் தளர்விக்கும் பசியைத் தணித்தார்.

எந்த நேரத்தும், தேவி கீதம் பாடினார். பராபரைப் பிரபாவப் பிரசங்கம் செய்தார். இதன் மூலம், பரசிவை பக்தர்கள் எங்கும் பெருகினர். பலகாலம் தொடர்ந்து நிகழ்ந்தது பணி. பஜனை வலுததது. பாவம் தேய்ந்தது. புண்ணியம் கனத்தது. பூதலம் உய்ந்தது. இவ்வளவிற்கும் காரணமான அச்சுதரும், அவர் குடும்பத்தவரும், பேரருள் தேவி திருவடி நிழலிற் பேரின்பம் கொண்டனர்.

வாழ்க தேவி தாஸர்கள்!.

---

விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியர் என்று இவர்கள்
மதியிலாதார் என் செய்வரோ வலிவல மேயவனே

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.)

## திரு ஏரகம்:

'மனிதன்' என்ற பெயரே மனம் படைத்துள்ள மகிமையால் வந்தது. நினைக்கும் கருவி நிலத்திருக்கப் பெறுவது மனிதப் பிறவியே. மனம் ஆக்கவும் அழிக்கவும் வல்லது. நல்லதும் அல்லதுமான நினைப்புகள் தோன்றும் நிலையமானது. குயவன் வைத்துக் கொண்டிருக்கும் சக்கரம் ஒரு முறை சுற்றுதற்குள்ளே கோடிக்கணக்கான எண்ணங்களைக் குவிக்க வல்லதும் மனமே. இதன் செயல்களை நோக்கித் 'தாவும் மனம்' அலையும் மனம்' 'துள்ளு மனம்' 'ஓடும் மனம்' என்று அழைப்பது உண்டு.

## தாவும் மனம்:

நிலையாக ஒன்றையே மனம் எப்போதும் நினைப்பதில்லை. ஒன்றை விட்டுப் பிரிந்து ஒன்றையும் மற்றொன்றையும் வேறொன்றையும் பின் ஒன்றையும் மேலும் ஒன்றையும் இன்னும் ஒன்றையுமாக எண்ணிக்கொண்டே இருக்கும். அலைகள் கடலில் ஓயாமல் அடிப்பது போல எண்ணங்களும் மனத்தில் ஓயாமல் எழுந்துகொண்டே இருக்கும். இக்காரணங்களால் ஒரு மரக்கிளையை விட்டு மற்றொரு கிளைக்குத் தாவும் குரங்கு என்று மனத்தைக் கூறுவர்.

"பாழ்த்த மனக் குரங்கு ஆட்டம் பார்க்க முடியாதே"

## அலையும் மனம்:

உலக முழுதும் ஓடியாடி அலையும் எண்ணங்கள் எண்ணில ஏற்பது மனம். இப்படி அலையும் தன்மையில் சிற்சிலவற்றில் விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ளும். இந்த இரு குணங்களும் பேய்க்கு உரியன. அலைவதும் யாரையேனும் பிடித்து ஆட்டுவதும் பேய்ச் செயலன்றோ?

---

குறையுடையார் குற்றமோராய், கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய், நெடுங்கள மேயவனே

ஆதலின் மனத்தைப் 'பேய் மனம்' என்றே கூறுவர். சித்தர்கள் வரிசையில் உள்ள ஒருவர்க்கு 'அகப்பேய்' சித்தர் என்றே பெயர். அதை உணராமல் அவரை 'அகப்பைச் சித்தர்' என்று வழங்குவர். அகப்பையாக ஒரு சித்தர் இருந்தால் சட்டிச் சித்தர் என்று ஒருவரும் இருப்பார் போலும்! கருத்து அதுவன்று. மனத்தைப் பேய் என்று உணர்ந்து பிறக்கும் உணர்த்தியதால் அகப்பேய்ச் சித்தரானார் என்க.

'மனமெனும் ஒரு பேய்க் குரங்கு மடப்பயலே!'
(வடலூர் வள்ளல்)

## துள்ளு மனம் :

'கன்று குட்டி துள்ளி ஓடும். மான் கன்றும் துள்ளி ஓடும். அதுபோல் வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் காணும் அற்ப சுகத்தை அதிகமாக யெண்ணி அகம் என்ற மானும் துள்ளிக் குதிக்கும். அல்லது ஆணவத்தால், அதிக ஆவேசத்தால் துள்ளிக் குதிப்பதும் மனத்தின் பண்பாகும். இதனால்தான் தருக்கித் திரியும் ஒருவனைப் பார்த்துச் 'சும்மா துள்ளாதே' என்று கூறும் உலக வழக்கையும் உன்னுக. மனத்தை மான்போன்றமனம் (துள்ளும் மறி—மான்) என்ப.

'துள்ளு மறியா மனத்தை' (தாயுமானார்)

## ஓடும் மனம் :

உலகில் அதிக வேகமாகச் செல்லத் தக்கவைகளாக மனத்தையும் காற்றையுமே சொல்வர். 'மனோ வேகம்' 'வாயு வேகம்' என வழங்குவர். இன்றும் ஒரு யந்திரத்தின் வேகத்தை அளக்கும்போது குதிரையின் வேகங் கொண்டு கணக்கிடுவர் இந்த யந்திரம் பன்னிரண்டு குதிரை வேகமுள்ளது (12 horse-power) எனக் கேட்கிறோம். அதாவது இக்கருவி பன்னிரு குதிரைகளின் ஓட்ட வேகத்தினை உடையது என்று பொருள். சென்னையிலுள்ள ஒருவன் திடீரென்று ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்கா முதலிய இடங்களையும் இருந்த இடத்

---

மனத்தகத்தோர் பாடல்ஆடல் பேணி இராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களமேயவனே

தில் இருந்தபடியே எண்ணி விடுகிறுன். இதுதான் மனோ வேகம் எனப்படும். இது அசுரத் தன்மை வாய்ந்தது. அமைதியைக் குலைப்பது. வேகம், வேகம் என்று அதிக பரபரப்புக் காட்டியவர்கள் நிருதர் என்னும் அசுரர்கள். அவர்களது பரபரப்பை—வேகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டிய வேலவன் திறமே கந்தபுராணம்.

"துரிதமிடு நிருதர் புர சூறைக் காரப்—பெருமாளே"
(துரிதம் - வேகம்.)

இனி, குதிரை வேகத்தில் செல்லும் மனத்தை அடக்கியதே அசுவமேதம் என்னும் பரிவேள்வியாகும். இதற்கு வேறு பொருள் கூறுவது பௌராணிக மதம். மனோ வேகத்தை அடக்கும் யோகம் வாசி (குதிரை) யோகம் எனவும் படும். முருக வேளின் பச்சைப் பரியான மயில்மேல் வருவதும் வாசியோகக் குறிப்பேயாகும்.

"வாசி[1] நடத்தித் தருவாண்டி—ஒரு
வாசி[2]யிலிங்கே வருவாண்டி.
ஆசில் கருணை உருவாண்டி.—அவன்
அற்புதத் தாள்மல ரேததுங்கடி"

(வாசி[1] - வாசி யோகம். வாசி[2] - (மரகத) குதிரையான மயில்.)

ஆலயத்தில் பெருவிழாவில் குதிரை வாகனத்தில் இறைவன் வருவதும் மனோ வேகம் கெடுத்த மாண்பே ஆகும். மனம் மாண்டவரான மாணிக்க வாசகரைத் துறைமங்கலத்தார் 'பரிமா மிசை வரப் பண்ணிய வித்தக!' (குதிரை மேல் வரச் செய்த வித்தகனே) என்கிருர். நரியைக் குதிரைப் பரியாக்கிப் பாண்டியன் முன்வந்த சொக்கேசர் பரிமா (குதிரை) ஏறி வந்ததும் இதனையே குறித்தது போலும்.

அதிக வேகமாய் விண்ணிலிருந்து மண்ணிலிறங்கியது ஒரு ஆறு. அதனால் அதற்கு 'கங்கா' (வேகமுடையது) எனப் பெயர். அதனை விரித்த சடையில் ஏற்று வேகத்தைக் குறைத்துப் பூமியில் விட்டார் சிவனார். இச் செயல் மனோ வேகத்தைக் கெடுத்த மாண்பை யுரைக்கும் தத்துவக்

---

பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய், நெடுங்கள மேயவனே

குறிப்புடையது. அது போலவே தமக்கும் மனோ வேகம் கெடுத்தருளிய மேன்மையைப் பாடும்போது

"வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க"

என்பர் மணிமொழிப் பிரான்.

## ஒருமை மனம் :

இதுகாறும் கூறியதிலிருந்து மனத்தின் பண்புகள் ஒருவாறு புலனும். இவ்விதமாக ஒரு வழியும் நில்லாது போம் மனத்தை—ஐம்புலக் கதவை அடைத்து ஆண்டவன் அடிக் கமலங்களில் ஒருமுக உணர்வுடன் ஒன்றுமாறு செய்வதுவே தவமுறைத் தியானம் ஆகும். அது ஒரே நாளில் கைகூடுவது அன்று. தினந்தினம் கொஞ்சம் கொஞ்சமாக சாதகம் செய்து வருவது. அதனைச் செய்யாதவர்கள் தன்னையும் பிறரையும் அறியாத சடம் (அறிவற்ற பொருள்) ஆவர். அவர்கள் தவவுணர்வின்மையால் அவமே கொண்ட கசடர் ஆவர். அவர்களுக்கு ஞானம் விளங்கப் பெருமல் அறியாமை மூடப்படுவதால் மூடர் ஆவர். எத்தனை சொன்னுலும் அவர்களைத் திருத்த முடியாத அறிவிலிகளாய் மட்டிகளாவர் என்ற உண்மையைத் தம்பால் ஏற்றிக் கொண்ட அருணை வித்தகர்,

"சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க—அறியாத
சடன், கசடன், மூடன், மட்டி"

என்று மனத்திற்குரிய படை வீடான திருவேரகத் திருப்புகழில் கூறுகிருர்.

## திரு ஏர் அகம்:

இவ்விதம் இறைவனை ஒன்றியிருந்து நினைப்பதுதான் குறை மனத்தை இறைமனம் (தெய்வ மனமாக) எனச்செய்யத் தக்கது. அப்போது அதற்கு திரு ஏர் அகம் (தெய்வ நலமும் பொலிவும் கொண்ட மனம்) எனப் பேர் வரும்.

இத்தகைய மனநிலை வந்துவிட்டால் மலமாசுகள் மடிந்து விடு பேற்றுக்கு வழியுண்டாகிவிடும். 'மனமுண்டானுல் வழியுண்டு' என்பது நோக்குக. இங்கு வழி என்றது மோட்சத்திற்கு வழி என்க.

---

தலைபுரிந்த பசிமகிழ்வாய் தலைவ! நின்ருள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே

**திரு ஏரகம் :**

மனம், அலையற்ற ஆழி போலவும், அனிலம் (காற்று) சேரா விளக்கினைப் போலவும் அமைதி (சாந்தி) கொண்டு அடங்குதல் வேண்டும். அதற்கு இடையூறாகும் ஐம்புல வாதனை அகல வேண்டும். அதற்கு முருகிய அன்பால் முருகனது தண்டையணிந்த முற்றாத நற்பதங்களைப் பற்றாகப் பற்ற வேண்டும். அதற்கு சிவச் சேய் தன் திருவருள் துணை வேண்டும் என்பவற்றைக், 'காரிய காரண முறையில் (ஒன்று வருவதற்கு மற்றொன்று வேண்டும்)

"அராப்புனைவேணியன் சேய் அருள் வேண்டும்; அவிழ்ந்த அன்பால், குராப் புனை தண்டையந் தாள் தொழல்
வேண்டும், கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும்; மனமும் பதைப்பற வேண்டும்."

'தடுங்கோள் மனதை........
வேல் விடுங்கோ னருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே'

என்றெல்லாம் உபதேசிக்கிறார்.

அமைதியான அகமே முருகவேளுக்கு விருப்பமான அருட் செல்வம் கொழிக்கும் அழகிய வீடாகும். திரு - அருட் செல்வம்+ஏர் - அழகு+அகம் - வீடு.

**திருவேரகம்:**

பாவ வினையிற் படிந்து துணை யேதுமின்றி தாவிப் படரக் கொழுக் கொம்பிலாத தனிக் கொடிபோல் தள்ளாடித் தவிக்கும் மனம் பாவி மனம் ஆகும். அது பாவ வினைகளைப் பறந்தோடச் செய்யும் ஆசான் அருளால், தீக்ஷாக் கிரமங்களால் தூய்மை பெற்றுப் பக்குவப் படுமானால், அந்த மனமே முத்திச் செல்வத்துக்கு மூலமான நிலயமாக மாறிவிடும். காரணம் முத்திக்கொரு வித்தான முருக வேள் உபாசனையே. அப்போது அந்த மனம் திரு (முத்திச் செல்வத்திற்கு)+வேர் - மூலமான + அகம் - இடம் (நிலயம்) என்றாகும்.

**ஏரகச் சிறப்பு :**

புன் மனம் புன்னெறிப் போக்கில் போகாமல் நன் மனமாய்ப் பொன் மனமாய்ப் பொலியும்போது அதில் பொன் மயிலிறைவன் திருக்கோயில் கொள்வான். அப்

---

*தாங்கி நில்லா அன்பினொடும் தலைவ நின் தாள் நிழற்கீழ்*
*நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே*

போது அது ஏரகம் என்றாகும். இந்த ஆழ்ந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு புற உலகில் காட்சியாவது திருவேரகம் என்ற சுவாமி மலைத் தலமாகும். இது காவேரி நேர் வடக்கில் உள்ளது. இங்குத்தான் சிவனார் மனங் குளிர பிரணவ உபதேசம் மந்த்ரமிரு செவிமீதிலும் பகர்ந்த சுவாமிநாதன் எழுந்தருளியுள்ளார். இவ் வரலாற்றால், மனமது செம்மையாக்க வல்லவரான குருவருள் தேவை என்று தெரிகிறது.

"குருவா யரற்கு உபதேசம் வைத்த குகனே" (ஏரகத் திருப்)
"உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் அடைந்தருள் பெறுவேனோ" (திருப்புகழ்)
"பரம குரு அருள் நினைந்திட்—டுணர்வாலே
பரவு தரிசனையை என்றருகு—அருள்வாயே"

உபதேசத்தால் ஜபமும் தவமும் பெருகும்; அவற்றின் பயனாய் முத்தி நிலையும் கிட்டுவதாகும்.

இதனாலன்றோ நமது நக்கீர நாயனாரும் திருமுருகாற்றுப்படையில் திருவேரகச் சிறப்பைக் கூறும்போது, நாற்பத்தெட்டு வயதுவரை அருங்கலை பயின்ற முத்திச் செல்வத்து இருபிறப்பாளர் நீராடி நியமத்துடன் சிரங் குவித்த கரங்கொண்டு ஆறெழுத்தோதி மலர் தூவி இறைஞ்சுகின்றனர் என்கிறார்.

"அறுநான்கு இரட்டி இளமைநல் லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலரஉடீஇ
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து
ஆறெழுத டக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கில நவிலப்பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலும் உரியன்"

ஆதலின் திருவேரகம் தியானஞ் செய்தால் மனம், வீட்டின்ப நெறிக்கு மூலமான தெய்வத் தன்மையும் அருட் பொலிவும் பெற்றுத் திகழுமென்க.

---

அருத்தனை ஆதி தேவன் அடியிணையே பரவும்
திருத்தர் சித்தர் இடர்களையாய் நெடுங்கள மேயவனே

# கீதை காட்டும் பாதை

## (அ. ராமமூர்த்தி)

### 7. விஷய சுகமும் ஆன்ம சுகமும்:—

குறிப்பிட்ட ஒரு பொருளினால் ஏதோ சில க்ஷணங்கள் மனிதன் இன்ப அனுபவம் பெறுகிறான். அந்த அனுபவம் க்ஷண நேரம் அவனை மெய்மறக்கச் செய்கிறது. இத்தகைய அனுபவம் விஷய சுகம் எனப்படுகிறது. சிற்றின்பமும் அத்தகையதே. கேவலமான இந்த சுகமானது அவனுடைய ஆயுளைக் குறைப்பதாகவும் உள்ளது. இன்ப அனுபவத்தின் பொழுது இருக்கும் மன நிலையானது அந்த இன்பத்தின் நிலையாமையைப் பற்றியோ, அற்பத்தன்மையைப் பற்றியோ, அந்த அனுபவத்தினால் தனக்கு ஏற்படப் போகும் நஷ்டத்தைப் பற்றியோ ஆராயத் தூண்டுவதில்லை

வாஸ்தவமான இன்பமானது மனிதனை வளர்ச்சிப் பாதையில் கொண்டு போவதாக இருக்க வேண்டும். சக்தியை இழக்காம விருக்கச் செய்ய வேண்டும். வஸ்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் இன்பத்தைத் தர வல்லதாக இருக்க வேண்டும்.

கருமம் செய்து அதனால் கிடைக்கும் இன்ப சுகம் தற்காலிகமானதுதான். விஷய சுகம், சிற்றின்பம் போன்றவை கருமத்தால் ஏற்படும் அற்ப சுகானுபவத்தைத் தான் தருகின்றன. சுகத்திற்குக் காரணமான விஷயம் எதிர்ப்படும் பொழுது மட்டுமே இன்பத்தைக் கொடுக்கக் கூடியவை.—சுகத்திற்குக் காரணமாயும் சந்தர்ப்பமாயும் உள்ள வஸ்து அழிந்ததும் அந்த சுகமும் அழிந்து விடும்.

சுக அனுபவத்தால் சக்தி விரயம் ஏற்படக் கூடாது. சிற்றின்பம் மனிதனுடைய சக்தியையும் ஆயுளையும் படிப்படியாக அழிக்கின்றது. ஆனால் பரம புருஷார்த்தமான ஆன்ம சுகமோ அனுபவிக்கும் பொழுதும் அனுபவத்திற்குப் பிறகும் மனிதனுடைய சக்தியையும் தேஜஸையும் விருத்தி செய்கிறது.

---

ஏறு கொண்டார்; சாந்தமீது என்று எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர்களையாய், நெடுங்கள மேயவனே

ஆன்ம சுகம் குறிப்பிட்டதொரு வஸ்து இடத்தில் தோன்றுவதோ அமைவதோ இல்லை, வஸ்து சேர்க்கையால் ஏற்படுவது ஆன்ம சுகம் ஆகாது. அது காரிய—காரணத் தொடர்புடையதல்ல. சுகப் பொருளும் சுகத்திற்கு ஆதாரமான பொருளும் அந்த ஆன்மா ஒன்றாகவேயுள்ளது.

பொருளாலோ, வஸ்து சேர்க்கையாலோ, செயல் புரிவதாலோ ஏற்படும் சிறிது நேரம், சுகம் விஷய சுகமேயாகும். விஷய சுகத்தை ஆன்ம சுகமென்று கருதி ஏமாந்து விடக்கூடாது.

ஆன்ம சுகத்தை லட்சிய மாகக் கொண்டவன் செயல் புரிவதால் பயனை யடைவதோ அடையாமலிருப்பதோ இல்லை. ஏனென்றால் செயல் புரியும் பொழுதே பயனைக் கருதி அவன் ஏதும் செய்வதில்லை.

விஷய சுகத்திற்கு மூல காரணம் ஆசை அல்லது பற்று. ஆன்ம சுகத்திற்கோ ஆசையின்மை அல்லது பற்றின்மை மூல காரணமாகிறது.

கரும சுகம் ஆன்ம சுகமாகாது என்றாலும், அதற்காக கருமம் செய்யாம லிருக்க வேண்டும் என்று பகவான் கூற வில்லை. அதற்கு மாறாக செய்ய வேண்டிய கருமத்தைத் தெளிவாகவும் செவ்வையாகவும் பற்றின்றி பயன் கருதாமையோடு செய்ய வேண்டும் என்று தான் கூறுகிறார்.

'வாஸ்தவமான பயன் என்பது கருதிப் பெறுவது அல்ல, அது தானே கிடைக்க வேண்டும்.

பயன் கருதாமல் கருமம் செய்யும் பொழுது செய்யப் படும் கருமம் 'விஷயம்' என்ற கேவலத் தன்மையினின்று வேறு படுகிறது. விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்பட்ட ஒரு கருமமானது அதன் பயனாக அந்தக் கருமம் செய்த கர்த்தாவுக்கு ஆன்ம சுகத்தைக் கொடுக்கிறது.

ஜனகன் போன்ற பெரியார்கள் கருமம் செய்தார்கள். கருமத்தின் பயனாக விஷய சுகத்தை யடையாமல் ஆன்ம சுகத்தைப் பெற்றார்கள்.

---

என்று நல்லவாய் மொழியால் ஏத்தி, இராப் பகலும்
நின்று தைவர் இடர்களையாய், நெடுங்களமேயவனே

பாமர மனிதன் கருமம் செய்யாமலிருந்தாலும் விஷய சுகத்தையே நாடுபவன் ஆவான். ஆனல் இலட்சியவாதியோ கருமம் செய்தாலும் அதன் பயனுக ஆன்ம சுகத்தையே அடைகிருன். எனவே 'சுகம்' என்பது வஸ்துவையோ அதை அனுசரித்த கருமத்தையோ பொறுத்த தல்ல—அதை அனுசரிக்கிற மனிதனின் (கர்த்தாவின்) லட்சியத்தையே பொறுத்தது என்று தெளிவாகிறது.

சாதாரண மனிதன் தனக்காகவே கருமம் செய்கிருன். ஆனல் ஆன்மீக இலட்சியவாதியோ உலகத்திற்காகக் கருமம் செய்கிருன். உயர்ந்த லட்சியத்தோடு தன்னலமின்றி பயன் கருதாமல் செய்யப்படும் எந்த ஒரு கருமமும் புருஷார்த்தமானது. எல்லோராலும் பின்பற்றத் தக்கது.

கண்ணன் செய்ய வேண்டிய கர்மம் எதுவுமே இல்லை. அவன் அடையாததும் அடைதற் குரியதும் ஒரு சிறிதும் கிடையாது. எனினும் தான் இன்னும் கர்மம் செய்து கொண்டிருப்பதாக அவர் பார்த்தனுக்கு எடுத்துக் கூறுகிருர்.

சோம்பலின்றித் தொழில் புரிவது மனிதனுடைய கடமை. புருஷார்த்த நோக்கத்தோடு செய்யப்படும் எந்த ஒரு தொழிலும் நிஷ்காம்ய கர்மம் என்று சொல்லப்படும். அத்தகைய கர்ம மானது 'ஆன்ம சுகம்' என்ற ஒரு பயனை—பயனை நாடாத அந்தக் கர்த்தாவுக்குக் கொடுக்கிறது.

ஒரே வஸ்துவானது பாமர மனிதனுக்கு விஷய சுகத்தையும், நிஷ்காம்ய கர்ம யோகியான ஆன்மீக லட்சியவாதிக்கு ஆன்ம சுகத்தையும் கொடுக்கிறது. ஆத்ம ஞானி அயர் வின்றிக் காரியம் செய்தாலும், எப்பொழுதும் விஷய சுகத்தினின்று நிரந்தரமான ஓய்வு பெற்றவன்.

**செயலில் ஒருவனின் ஈடு பாட்டைக் கொண்டு அவனுடைய கருமத்தின் அளவை மதிப்பிட முடியாது. வெளிப்படையான ஈடுபாடு மட்டும் கருமத்தின் அளவு கோலாகாது.**

பாமரனின் செயல் ஈடுபாட்டிற்கு விஷய சுகமே நோக்கமாக இருக்கிறது. ஆன்ம சுகமோ நோக்கமற்ற—

---

**கேழல் வெண் கொம்பு அணிந்த பெம்மான், கேடிலாப் பொன்னடியின் நிழல் வாழ்வார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே**

பயன் கருதாக ஈடுபாட்டின் விளைவாக உள்ளது. ஆம்! ஆன்ம சுகம் வேண்டிப் பெறுவதல்ல. அவன் அருளால் அவனே கொடுப்பது.

விஷயம் அல்லது வஸ்து எப்பொழுது அழிகின்றதோ அப்பொழுதே அதை அனுசரித்த சுகமும் அழிந்து விடுகின்றது.

வஸ்து சம்பந்தமே கூட 'பற்றின்மை' என்ற புனிதத் தன்மையோடு கூடும்பொழுது ஆன்ம சுகத்தையே தோற்றுவிக்கின்றது.

ஆன்ம சுகம் என்பது ஆன்மாவிலேயே தோன்றி, ஆன்மாவிலேயே நிலை பெற்று, ஆன்மாவிலேயே இன்புற்று, ஆன்மாவிலேயே திருப்தியுற்று, ஆன்மாவிலேயே சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதாகும்.

அந்த சுகம் என்றும் குறைவதோ அழிவதோ இல்லை. தொடர்ந்து வளரக் கூடியது. தன்னை அனுபவிக்கும் கர்த்தாவையும் தன்மயமாக ஆக்கக் கூடிய பூரணத்தன்மை கொண்டதாகும். மனதால் எண்ணினாலே சிந்தனையில் தோன்றக் கூடிய அவ்வளவு எளிமையும் வாய்ந்தது. அருள் ஒன்றாலே மட்டும் லபிக்கக் கூடிய கடினமுமானது. நாம் நெருங்கினால் அதுவும் நம்மை நெருங்கும். சிறிது நழுவினாலும் கேவலமான விஷய சுகம் நம்மை ஆட்கொண்டும் விடும்!

(தொடரும்)

---

# ஊசியும் நூலும்

## (V. R. G.)

நாம் உயர்ந்த புத்திமானாவதற்குப் பல நூல்களைக் கற்றலும், நல்ல கேள்விகளை கிரஹித்தலும் வேண்டும். ஒரு மனிதன் சாஸ்திரங்களைக் கற்று வல்லவன் ஆவதற்கு மூன்று குணங்கள் வேண்டியது அவசியம்.

---

அஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திரம், நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய், நெடுங்களம் மேயவனே

ஒன்று—கல்வி நூல்களின் நுட்பங்களை கிரஹிப்ப தற்கு மிகக் கூர்மையான அறிவு.

இரண்டு—கல்வி கற்று முடியும் வரை, வேறு பய னற்ற வழிகளில் மனதைச் செல்ல விடாமல், ஒரே புத்தி யாய் குருகுல வாசமாய் இருந்து சாதிக்க திடமான வைராக் யம் வேண்டும்.

மூன்று—நம்பினும் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோரை அணுகி, அவருடன் பழகி அவர் உபதேசிக்கும் அறிவுரைகளையும், மிக நுட்ப விஷயங் களையும் செவியாறக் கேட்டு மனங்குளிர வாங்கி கவனத் துடன் புத்தியில் பதிய வைத்தல். இதற்குக் கேள்வி ஞானம் எனப் பெரியோர் கூறுவர். கல்வி, கேள்வி இரண் டும் அறிவின் வளர்ச்சிக்கு மிக்க அவசியமாகும். ஆதலால் கேள்விகளை கிரஹிக்கக் கூடிய காதுகளும் முக்கியமாம்.

எவ்வளவு கற்றவனுயினும், உலகானுபவம் நிறைந்த நல்ல கேள்விகள் அற்றவனுயின் பயனிலன் ஆவான். அவன் கற்ற கல்விகளால் அவனுக்கு நன்மை உண் டாகாது. கல்வி, கேள்வி இரண்டிலும் வல்லவனே உயர்ந்தோனுவான்.

ஆதலின் கல்வி கற்பதற்கு வேண்டிய சாதனங்கள் நல்ல நூல்கள். அவைகளைக் கற்க வளைக்க முடியாத திட வைராக்யம், மிகக் கூர்மையான புத்தி, கேள்விகளை நன்கு கிரஹித்து, பலனளிக்கவல்ல காதுகள், இவை களேயாம்.

இதற்குப் பொருத்தமான உபமானம் ஊசியும் நூலும் என்னலாம்.

எப்படி எனின்? துணிகளைத் தைப்பதற்கும் மூன்று சாதனங்கள் வேண்டும்.

கல்வி கற்பவனுக்கு வேண்டிய மூன்று குணங்களும் அவன் உடலிலேயே அமைந்திருத்தல் வேண்டும். அதே போல, தையல் வேலைக்கு அவசியமான ஊசியின் இடத் தையே, கூர்மையான முனை, வளையாமல் உறுதியாயுள்ள

துண்டரங்கப் பூண்மார்பர், திருத்தோணி புரத்து உறையும்
பண்டரங்கர்க்கு என்நிலைமை, பரிந்து ஒருகால் பகராயே

உடல், நூல்கள் நுழையக்கூடிய காது, ஆகிய மூன்று குணங்களும் பொருந்தியிருக்க வேண்டும்.

கூர்மையான முனை = புத்திக் கூர்மை.

உறுதியான உடல் = திடவைராக்கியம்.

ஊசியின் காது = கல்வி கேள்விகளை கிரகிக்கும் காதுகள்.

நூல் = சாஸ்திரங்கள்

இத்தகைய குணங்கள் நன்கு அமைந்த ஊசிதான் தையல் வேலைக்கு லாயக்குள்ளதாகும். சிறிய துண்டுகளாயுள்ள துணிகளை நூலின் உதவியால் நன்கு பிணைத்து ஒன்றுக்கி அதற்கு ஒரு புதிய உருவையும் உயர்ந்த அந்தஸ்தையும் கொடுக்கிறது.

கல்வி கேள்விகளில் சிறந்தவன் தன் புத்தி வன்மையாலும், சமயோஜித நடத்தையாலும், சிற்றறிவுள்ள பல சிதைந்த உள்ளங்களைத் தூய்மையாக்கி ஒன்றுபடுத்தி, சமூகத்திலுள்ள வேற்றுமைகளையும், பகைகளையும் நீக்கி, மனித வர்க்கத்தை இன்புறச் செய்து தானும் மேன்மை அடைவான்!

சுபம்.

---

# " முனிவர் காட்டிய முதல்வன் "

(சி. குமாரஸ்வாமி)

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை சுமார் 5-30 மணிக்கு எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள ரேடியோ மலைக்குச் சென்று ரேடியோ கேட்கப் புறப்பட்டேன். கொஞ்சதூரம் நடந்ததும் ஒரு குரல் என்னைக் கூப்பிட்டது காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன். கூப்பிட்டவர் ஒரு பழுத்த கிழவர். நரைத்த தாடியுடனும், ஜடாமுடியுடனும் காட்சிதந்தார்.

---

செறிசிறூ பதம் ஓதும் திருத்தோணி புரத்து உறையும்
வெறிதிரூர் மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே

"சுவாமிகளுக்கு என்னவேண்டும்?" என்று கேட்டேன். "அதோ தெரிகிறதே அந்த மலைக்கு எப்படிச் செல்வது?" என்று வினவினர். நானும் அவர் சுட்டிக் காட்டிய மலைக்கே சென்று கொண்டிருந்ததால் அவரையும் அழைத்துச் சென்றேன்.

மலைக்குச் சென்று இருவரும் ரேடியோவில் யாரோ பாடிக்கொண்டிருந்த இனிய பாட்டைச் சிறிதுநேரம் ரசித்தோம். பிறகு எங்கள் சம்பாஷணை ஆரம்பித்தது. (எங்கள் சம்பாஷணையும், பிறகு நடந்தவையும் உங்களுக்கு தெரிந்திருக்கட்டுமே!)

"சுவாமிகளுக்கு எந்த ஊர்?"

"எல்லா இடமும் என் ஊர்தான்"

"தங்கட்கு மலையும், மலைசார்ந்த இடமும் அதிக விருப்பமான இடங்கள் போலும்"

"ஆமாம், எனக்குமட்டுமென்ன, நான் இதய பூர்வமாக விரும்பும் ஒருவனுக்கும் பிடிக்கும். அவனிடம்தான் நான் சொல்லப்போகிறேன்.

"தாங்கள் மனப்பூர்வமாக விரும்பும் அவன் யார் சுவாமி"

"அவனைப்பற்றி நீ அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்தான். ஆனல் அவன் வீர பராக்கிரமங்களை ஒரு நாளில் சொல்லிமுடியாது. எனக்கும் இங்கே தங்கி உனக்கு விளக்கிக்கூற இயலாமைக்கு வருந்துகிறேன். என்னுடன் வருவதாக இருந்தால் நேரிலேயே அவனைப் பார்க்கலாம். உன்னால் என்னுடன் வர முடியுமா? அப்படி வருவதாயின் நடந்துதான் வரவேண்டும். நான் போகும் இடங்களுக்கெல்லாம் என்னைத் தொடர வேண்டும். திரும்பிவர நாட்களானாலும் ஆகலாம். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு புறப்படுவதானல் சரி"

"ஆகா, அதற்கென்ன சுவாமி. நாளை காலையில் சூரியோதயத்திற்கு முன் புறப்பட்டு விடுவோம்"

நீ என்னோடு வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி. நான் போகும் பாதை சற்று சிரமமாக இருக்கும். ஆனல், நீ

---

**செண்பகம் சேர்பொழில் புடைசூழ் திருத்தோணி புரத்து உறையும் பண்பனுக்கு என் பரிசுரைத்தால் பழியாமோ மொழியாயே.**

மற்றும் யாவரும் போற்றும் பெரு வீரனைப் பார்க்கப் போகிறாய் அல்லவா?

[எங்கள் ஏற்பாட்டின்படி மறுநாள் விடிவதற்கு முன் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு எங்கள் பிரயாணத்தைத் தொடங்கினோம்.]

"கடற்கரை எங்கே யிருக்கிறது?"

"என்ன சுவாமி? யாரிடமோ அழைத்துச் செல்வதாகக் கூறினீர்கள். ஆனால் கடற்கரை எங்குளது என்கிறீர்கள்? இங்கிருந்து சுமார் 18 மைல் தூரத்திலுள்ள மஹாபலிபுரத்திற்குச் சென்றால் கடற்கரையைக் காணலாம். (செங்கற்பட்டி லிருந்து சுமார் 16 மைல்)

"சரி, அங்கேயே செல்வோம்"

[நாங்கள் மஹாபலிபுரம் கடற்கரையை அடையவும் சூரியோதயம் ஆகவும் சரியாக இருந்தது]

"சூரியனுடைய செந்நிறமும், கடலின் நீல நிறமும் ஒருங்கே சேர்ந்து எவ்வளவு அழகாகவும், பிரகாசமாகவும் உள்ளது? சூரியன் இல்லையேல், எதுவுமே இல்லை. நான் சொன்ன வீரனின் கருணை இல்லையேல் சூரியனும் இல்லை- உலகமே இல்லை. இக்காலைக் காட்சியைக் காட்டவே உன்னை இங்கே அழைத்துவந்தேன். சரி, அதிக வெய்யில் ஆகுமுன் கொஞ்ச தூரம் நடப்போம்.

"சுவாமி நாம் நடந்துசெல்வது சிரம மில்லாதிருக்க, நாம் காணப்போகும் அந்த வீரனைப்பற்றி சொல்லிக் கொண்டே வந்தீர்களானால் மிக நலமாக இருக்கும். தயவு செய்து கூறுங்கள்"

"ஆமாம். நானே ஆரம்பிக்க நினைத்தேன். நீயும்கேட்டு விட்டாய். மிக்க நல்லது. சரிகேள்"

"நாம் பார்க்கப்போகும் வீரன் சூரியனைப்போல், தூரத்திலிருந்து பார்க்கும்போது செஞ்ஜோதிப் பிழம்பாக மிக்க பிரகாசமாகக் காணப்படுவான். சூரியன் கடலிலிருந்து உதயமாகிறான், அதேபோல் இவனும் நீலநிறமுடைய (மயில்) பறவையின்மேல் ஏறிச் செல்கிறான். சூரியனை எல்லோரும் புகழ்கிறார்கள். இவனையும் உலகம்

---

**சேண்டகைய மணிமாடத்து திருத் தோணிபுரத்து உறையும்**
**ஆண்ட கையாற்கு, இன்றே சென்று அடிஅறிய உணர்த்தாயே**

போற்றுகிறது. சற்று அருகில் சென்ருல் தன்னிடம் அடைக்கலம் புகுந்தோரைக் காக்க வல்லவையும் அறியாமையைப் போக்கக்கூடியவையுமாகிய வலுவுடைய திருப்பாதங்கள் தெரியும். அவனுடைய கைகளோ மிகவும் விசாலமானவை. தன்னை எதிர்த்துப் போர்புரிவாரை தப்பாமல் கொல்லும். அதுமட்டுமா. அவனது மனைவி குற்றமற்ற கற்புடையவள். ஒளிவீசும் நெற்றியை யுடையவள்''

''என்ன சுவாமி, பேசிக்கொண்டே காட்டுக்குள் நுழைகிறீர்கள்?''

''காரணமாகத்தான். இந்தக் காட்டிலே ஒரு விசேஷம் என்னவென்ருல், நிறைந்த கருப்பத்தையுடைய மேகமானது இங்கே முதல் மழையைப் பெய்து நல்ல மணம் வீசச் செய்கிறது.

''இது என்ன மரம் சுவாமி? இதன் அடிமரமோ மிகவும் பருத்து உள்ளது. மிகவும் அடர்ந்து ஒரே இருட்டாக உள்ளது. பூக்கள் தேர் உருளைகள்போல் உள்ளன.''

''ஓ! அதுவா. இந்த மரம்தான் செங்கடம்பமரம். இதில் பூத்துள்ள கடம்பப் பூக்களாலான குளிர்ந்த மாலையையே அவனது திருமார்பில் அணிந்துகொண்டு, நான் முன்னே சொன்ன அந்த கற்புக்கரசியோடு இன்பம் நுகர்கிருன். அவனைப் போற்றுவோரும் இன்பம் அடையச் செய்கிருன். கடப்பமாலை போகத்துக்குரிய மாலை''.

அதோ தெரிகிறதே அந்த மலைச்சாரல் வழியாகத் தான் நாம் செல்லவேண்டும். நாம் அங்கே தங்கி சுற்றிப் பார்த்துவிட்டு பிறகு புறப்படுவோமா?

இங்கிருந்து மலைச்சாரல் வெகு தொலைவில் இருக்கும் போல் தோன்றுகிறதே சுவாமி?

பயப்படாதே. அதிக தூரமில்லை. நாம் அங்கே சென்று தங்கி நாளை புறப்படுவோம்.

[இருவரும் மலைச்சாரல் சோலையை அடைந்தோம். சற்று இளைப்பாறியபின் சோலையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.]

''சுவாமி இங்கு ஏதோ பெண்களின் குரல் கேட்

---

**தோராத நெடுவீதித் திருத் தோணி புரத்து உறையும்**
**நீராரும் சடையாருக்கு என் நிலைமை நிகழ்த்தீரே**

கிறதே" "ஓ! அதோபார். ஓடியாடி விளையாடுகிறார்கள். அவர்கள் அழகில் மயங்கி மூர்ச்சை போட்டு விழுந்து விடாதே''

ஆஹா! என்ன அழகு? என்ன அழகு? பெண்களென்றால் இப்படியல்லவோ இருக்கவேண்டும். தெய்வப் பெண்கள் என்கிறார்களே அவர்களோ இவர்கள்? இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். பசியோ வேறு கவலையோ தெரியாது.

சரி சரி இங்கே அதிகநேரம் இருந்தால் இந்த இடத்தைவிட்டு நீ நகரமாட்டாய். நமக்கு நேரமாகிவிடும். சோலை முழுதும் சுற்றிப் பார்க்க முடியாது. அப்பெண்களைப் பற்றிய வரலாறு பூராவும் நான் சொல்கிறேன் புறப்படு.

''கிண்கிணி சூழ்ந்ததும், ஒளியுடையதுமாகிய சிறிய அடியையும், திரண்ட கால்களையும், வளைந்த இடையினையும், பெரிய தோள்களையும், இயற்கையாகவே சிறந்த பூவேலை செய்த ஆடையையும், பலமணிகளைக் கோர்த்து மேகலையினை அணிந்த அல்குலினையும், இயற்கையாகவே பெற்ற அழகினையும், சம்பூநதம் என்ற பொன்னால் செய்யப் பட்டஆபரணங்களையும், தொலைவிலும் சென்று பிரகாசிக்கும் உடலழகையும் உடையவர்கள், நாம் சற்று முன்னே பார்த்த அப் பெண்கள்.

அதுமட்டுமா. அவர்கள் கூந்தலிலே வெட்சிப் பூவின் சிறிய இதழ்களை இடையில் வைத்து, குவளையினது இதழ்களையும் கிள்ளிவிட்டு, சீதேவி, வலம்புரி என்னும் தலைக் கோலங்களை அவற்றிற்கு உரிய இடத்திலே வைத்து, திலகமிட்ட அழகிய நெற்றியில் மகரமீனின் அங்காந்த வாய் வடிவாகச் செய்த தலைக்கோலம் நன்றாகப் படியும் படியாகச் சீவிச் சிக்கறுத்து நன்கு முடித்த கொண்டையில், சண்பகப் பூவைச் செருகி, கரிய மேலிதழையும், பஞ்சு போன்ற தூய்மையும் உடைய மருதங் கொத்துகளை அதன் மேலே இட்டு, நீரில்கீழ் உள்ள சிவந்த அரும்புகளால் கட்டிய மாலையை வளையச்சுற்றி, மிக அழகாக அவர்களது தலையை அலங்காரம் செய்து கொண்டுள்ளனர்.

---

**தோற்றுவித்த திருத்தோணிபுரத்து ஈசன், துளங்காத**
**கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே**

அவர்கள் காதிலே அசோகந்தளிர்களை அணிந்துள்ள னர். தளிருக்குக் குழை என்று பெயர், அந்தக்குழைகள் அப்பெண்களின் அழகிய மார்பிலேவந்து அசைகின்றன.

அவர்கள் தனங்கள், கோங்கரும்பைப்போல அழகு பெற்று நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றின்மேலே நன்றாக முற்றிய சந்தனக் கட்டையை அரைத்துச் சேர்த்த நல்ல வாசனையையுடைய சந்தனக் குழம்பை, மருதம்பூவை அப் பினைப்போல அனுப்பியுள்ளனர். அதன்மேலே வேங்கைப் பூவின் தாதையும் அப்பியுள்ளனர். விளாமரத்தின் தளி ரைக்கிள்ளி ஒருவர்மேலே ஒருவர் வீசிக்கொண்டிருக்கிறார் கள்."

ஆம்சுவாமி, அப்பெண்கள் யார்? ஏன் இங்கு வந்தார் கள்? அவர்கள் லாவண்யத்தை ஒன்று விடாமல் அங்கம் அங்கமாக வர்ணித்து விட்டீர்களே! மிகச் சந்தோஷம்.

அந்தப் பெண்கள் தெய்வமகளிர். அவர்கள் வந்ததன் காரணம், அவர்களது அலங்காரத்துக்குத் தேவையான பூக்களும் சந்தனக் கட்டையும் இங்கே கிடைக்கும். அவர் கள் ஆடிப்பாடி விளையாடுவதற்கும் சௌகரியமாக உன் னது இச்சோலை. அதுமட்டுமல்ல. நாம் தேடிச்செல்லும் வீரன் தலையிலே கண்ணியாக அணிந்து கொள்ளும் செங் காந்தள் மலர் இங்கே மலர்கிறது. செங்காந்தள் மலரை வண்டுகள் மொய்ப்பதில்லை. இந்தச்சோலையில் இன்னொரு முக்யத்துவம் என்ன தெரியுமா? இங்கே மரங்களைத்தாவும் குரங்குகளும் ஏறமுடியாத மிக உயர்ந்த மரங்கள் பல வானுற ஓங்கி வளர்ந்துள்ளன. மூங்கில் மரங்களும் இங்கு மிக உயரமாக வளர்ந்துள்ளன:

இந்தச் சோலையிலே வந்து அந்த மகளிர், நம்வீரனை "உனது சேவற்கொடி நெடுங்காலம் வாழ்க", "அரக்கனை அழித்த செவ்வேலை யுடையவனே வாழ்க" என்று போற் றிப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

இச்சோலையையும் சுற்றிப்பார்த்துவிட்டோம். தெய்வ மகளிர்பற்றிய செய்தியையும் முடித்துவிட்டேன். இனி நமது பிரயாணத்தைத் துவங்கலாம். (தொடரும்)

---

தென் றலார் புகுந்துலவும் திருத்தோணி புரத்து உறையும்
கொன்றைவார் சடையார்க்கு, என்கூர் பயலை கூறீரே

# முருகன் அருள் வடிவம்

(ஆ. கி. ரங்கராஜன்)

முருகன் முரடர்களை ஒழித்தான் என்றால் அம் முரடர்களை விடப் பெரும் முரடன்தானே முருகன்? அவனை அருள் வடிவம் என்று எவ்வாறு கூற முடியும்? அருணகிரியார் கூறுவதைக் கேட்போம்.

கொடிய படுகொலை நிசிசரர் உரமொடு
குமுகுமெென விசையுடனிசை பெறமிகு
குருதி நதிவித சதியொடு குதிகொள விதியோட
குமுறு கடல்குடல் கிழிபட வடுமரம்
மொளுமொளென அடியொடடிற்றி விழஉயர்
குருகு பெயரிய வரைதொளை படவிடு சுடர்வேலா!

[அரக்கர்களின் சரீர, மனோ திடத்துடன் அவர்களது உதிரமும் நதியாகப் பெருகி ஓசையுடன் கொந்தளித்து ஓட, அவர்கள் இறைவனிடம் விதித்துக் கொண்ட வரங்களும் ஓட, அலை கடலின் நீர் பிளவுண்டு மாமரமாய் நின்ற கொக்கன் மொளு மொளு என வேருடனும் பெரு ஒலியுடனும் கூறுபட்டு சாய்ந்து வீழ, கிரவுஞ்சம் எனும் பறவை பெயர் தாங்கிய மாயப் பர்வதம் சிதைந்து அழிய வீசிய அக்னியைக் கக்கும் பிரகாசமான வேலாயுதத்தை உடையவனே!]

உயரிய மாநாகமும் நிருதரும் நீறாய்விழ
ஒருதனி வேல் ஏவிய பெருமாளே!

[மாநாகம்-கிரவுஞ்ச கிரி. நிருதர்-முரடர்களாகிய அவுணர். நீறு ஆக-பஸ்மீகரமாக]

வடபொற்குல மேருவின் முடுகிப்பொரு சூரனை
மடியச்சுட ஏவிய வடிவேலா!

இவ்வாறாக முருகன் போர் புரிந்து இரக்கமே இன்றி அனைவரையும் வதம் புரிந்ததாக அருணகிரி நாதரே குறிப்பிடும்போது அவன் அருளே உருக்கொண்டவன் என்று எவ்வாறு கூறத்தகும்?

---

தேனுறும் பொழில் புடைசூழ் திருத்தோணி புரத்து அமரர்
கோனுரை, பென் னிடத்தே வரவொருகால் கூவாயே

அறிவற்ற மறவராம் குறவர்குல மங்கையைப் பல வந்தமாக அடைந்த முருகன் எவ்வாறு கருணையுள்ளவனாக முடியும்? இது சிலரது சந்தேகம்!

முருகன் கருணா சமுத்திரன் என்பதை மூதறிஞர்களும் பாமரர்களும்கூட உணருவர்.

துஷ்டர்கள் தாமே வாழ வேண்டி மற்றவர்களைத் துன்புறுத்துவர். பல வகைகளிலும் இம்சிப்பர். இறைவன் அதற்கெனவே அவ்வப்போது அவதரித்து துஷ்டர்களை ஒழித்து மற்றவர்களைக் காப்பாற்றுவன். அவ்வாறு தோன்றியவனே ஸ்ரீ முருகன். அவனது புகழ் அளப்பரிதாம்.

முருகு என்னும் பதத்திற்கு தேன், பாகு, இனிமை, இன்பம், நெகிழ்ச்சி என்பன பொருள்களாம். ஆகவே அனைவர்க்கும் இன்பத்தைப் பொழியும் இறைவன் திருமுருகனேயாம்.

அகரம் படைத்தல் தொழிலையும், உகரம் காத்தல் தொழிலையும் மகரம் அழித்தல் தொழிலையும் புரியும் ஆற்றலுடையன. முருகு என்னும் வார்த்தையில் உகரமே மூன்றெழுத்திலும் ஒலிப்பதினால் சொர்க்க, மத்திய, பாதாளம் ஆகிய மூவுலகங்கட்கும் முக்காலங்களிலும் கருணையையே பொழிபவன் கந்தன் என்று அறியலாம். அழிக்கும் காலத்திலும் கந்தன் அருளைப் பொழிபவன் என்பதை சூரபத்மன் மயூரமாகவும் சேவலாகவும் உருமாறி சரணடைந்தபோது அன்புடன் ஊர்தியாகவும், துவசமாகவும் ஏற்றுக்கொண்டான் என்ற வரலாற்றினால் அறியலாம்.

மாபெரும் தவத்தின் விளைவாய் மகேஸ்வரனிடம் பெற்ற வர மகிமையால் செருக்கடைந்த சூர பத்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும், எண்டிசைகளையும் தனது ஆட்சியில் ஒடுக்கி நல்லோரை நாசமாக்கித் தீயோரைப் பெருக்கி அட்டகாசம் புரிந்தான். அவனது அக்ரம அரசாட்சியில் அமரரும் அவனியோரும் ஆற்றொணா அவதிப்பட்டனர். அமராவதி அழிக்கப்பட்டது. எல்லையற்ற தொல்லைகளை நூற்றெட்டு யுகங்களாய் அனுபவித்து சகியாது அவலமடைந்த அனைவரும் சோமனை சூடிய சுந்தர

---

**சொற்பதம் சேர் மறையாளர் திருத் தோணிபுரத்து உறையும்**
**விற்பொலிதோள் விகிர்தனுக்கு, என்மெய்ப் பசலை விளம்பாயே**

ராஜனும் பரம் பொருளாகிய கண்ணுதற் கடவுளை இறைஞ்சித் தங்கள் துன்பம் துடைக்குமாறு வேண்டிக் கதறினர். ஐந்தொழில் புரியும் அம்பிகா நாதன் தனது அருள் பொழியும் ஐந்து வதனங்களுடன் தொல்லைத் திரு முகமாகிய ஆருவது முகத்தையும் கொண்டவனுய் அண்டினேர் அல்லல் தீர்க்கத் திருஉள்ளம் கொண்டு ஆறு நுதற் கண்களினின்றும் கருணைக் கனல் பொழிந்தான்.

''மண்ணளந்திடு மாயனும் வனசமேலவனும்
எண்ணரும் பகல் தேடியும் காண்கிலா திருந்த
பண்ணவன் நுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்
எண்ணிலாத பேரருளினல் மதலையாய் உதித்தான்''

இவ்வாறு தோன்றியவனே முருகப் பெருமான். கனலி னின்று தோன்றிய கந்தன் கனல் போன்றே சினம் மிக்க வனுய் விளங்குவான் என எண்ணற்க! நித்ய கல்யாணி யான மீனலோசனியாம் உமா மகேஸ்வரியைக் கந்தன் தாயாகக் கொண்டான். முருகனை சூர பத்மனிடம் போருக்கு ஏவுமுன் ஞான சௌந்தரியாகிய புவனேஸ்வரி அவனுக்கு ஞானவேல் அருளி, ஆணவத்தினல் அஞ்ஞானத் தில் ஆழ்ந்து அநீதிகள் புரியும் சூர பத்மனை அழிக்காது அடக்கி அன்புடன் அறிவூட்ட வேண்டுமெனப் பணித் தாள். என்னே தாய்மையின் கருணை! அவ்வாறே செய்வ தாக ஒப்புக்கொண்டான் அருட் பிழம்பாகிய கந்தன்.

தஞ்சமென்றோரை ஆதரிக்கும் தயாபரனுகிய கந்தன் அவுணர்களை சமாதானத்திற்கு அழைத்தான். அக்ரம ஆட்சியை மாற்றிக் கொள்ளுமாறு எச்சரிக்கையை விடுத் தான். செருக்குள்ள சூர பத்மனே அதை லக்ஷியம் செய்ய வில்லை. அறக்கடவுளான கந்தன் மறக் கருணை கொண் டான். எவரையும் வாழ்விப்பதே என் கடமை எனத் துணிந்து நின்ற இறைவன் முருகன் அரக்கருடன் போர் தொடுத்தான். மாயக் கிரவுஞ்ச மலையைத் தகர்த்தான். தாருகன், சிங்கமுகன் முதலியோரை மடித்தான். தொடர்ந் தது மாபெரும் போர். ஆண்டுகள் பதினெட்டு கடந்தும் சலியாது அமர் புரிந்தான் கந்தப் பெருமான். கருணையால் விளைந்த சினமாதலின் சூர பத்மன் கந்தனை வெல்ல இய

---

துறையாரும் கடல் தோணி புரத்தீசன், துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கு ஒருகால் பேசாயே

லாமல் தத்தளித்தான். துஷ்ட அரக்கர்கள் எண்ணற்றோர் வீழ்ந்தனர்.

இறுதியில் சூர பத்மன் கடலின் நடுவே மாமரமாக நின்றான். சுடரொளி வீசிக் கடல் நீரைக் கிழித்துக் கொண்டு கந்தனின் வேல் மாமரத்தை ஊடுருவிச் சென்றது. இரு பிளவான சூர பத்மன் ஒன்றாகச் சேர முடியாமல் மயிலாகவும் சேவலாகவும் மாறினன். ஆனால் வேலாயுதம் ஞான அம்சமாதலால் சூரபத்மன் அகந்தை நீங்கிப் பேரருளாளனும் கார்த்திகேயனைச் சரணடைந்தான். கந்தன் நிகழ்ந்தவை முற்றும் மறந்தவனாய் அன்பு கொண்டு சூர பத்மனுக்குத் தனது அழகிய விசுவ ரூபத்தைக் காட்டியருளினன். "நீ என்றென்றும் எம்மிடமே இருப்பாயாக! உனது வரங்களும் அதன் பலன்களும் நித்யமாய் விளங்குவதாகுக!" என்று அருளி மயிலைத் தனது வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்று அருள் புரிந்தான்.

தன்னைப் பணியும் பக்தர்கள் வேண்டும் எதுவாயினும் அளித்து ஆட் கொள்பவன் கந்தன். அன்புருவாய் விளங்கும் அரனும் அச்சுதனும் தானே என்பதைப் பொய்யா மொழிப் புலவருக்கு விளக்கினன். அளித்தல் தொழில் புரியும் ஆனந்தக் கண்ணனின் கையில் வேலாயுதமும் இருப்பதாகத் திருப்பாவை பாடிய ஸ்ரீ ஆண்டாள் கூறியுள்ளதைக் கவனிக்குமிடத்து, கண்ணன் காண்டீபனிடம் "எவன் எந்த உருவத்தில் என்னைக் கண்டு எந்த நாமங்களால் என்னைப் பஜிக்கின்றானோ அவ்வாறே யான் அவனுக்கு அனுக்ரஹம் புரிகின்றேன்" என்று கூறியதும், அமுத சாகரத்தில் அமர்ந்து அகில உயிர்களின் அமைதிக்காக யோக நித்திரை புரியும் கேசவன், ரஜத வெற்பில் வீற்றிருந்து அண்டங்கள் தழைக்க அரும் நிஷ்டை புரியும் ஈசன் இருவரும் ஒருவரே என்பதும் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

"வென்று பகைகொடுக்கும் நின்கையில் வேல் போற்றி!"

—திருப்பாவை

---

பொடி துகரும் சிறுத்தொண்டர்க்கு அருள் செய்யும் பொருட்டாகக் குடி நகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே.

[பகை கெடுக்கும் நின் அன்பும் அருளும் கொண்டு, காமமாதிய அறு பகைவரை வென்று ஒழிக்கக் கூடிய உனது கையில் உள வேலுக்கு வணக்கம்.]

வேறொரு முறையில் முருகனைக் காண்போம். அவனது ஊர்தி...

குன்றிமணி போலும் செங்கண் வரி நாகம்
கொண்ட படம் விசும் மணிகூர்வாய்
கொண்ட மயில்......[திருப்புகழ்]

கருடனும் சர்ப்பத்தின் வைரியே. கருடன் கண்ணனின் வாகனமாகும். முருகனுக்கு ஆறு முகங்கள், பன்னிரு கண்கள், பன்னிரு கரங்கள் ஆக முப்பது உறுப்புக்கள். சிவபிரானுக்கு பஞ்ச வதனங்கள், பத்துக் கரங்கள், பதினைந்து நேத்ரங்கள் ஆக முப்பது உறுப்புக்கள். இவ்வாறு பல வகைகளிலும் முருகன் ருத்ர நாராயணர்களுடன் ஒன்றியுள்ளான்.

ஆதி பகவன் என்போரின் புதல்வியாய் அவதரித்த ஔவை அறிவுக் கடலேயாம். அவள் கொண்டிருந்த சிறிதளவு அறியாமையையும் இறைவன் முருகன் இடையனாய்த் தோன்றி நீக்கி அருளினன். விநாயகனும் தானும் வேறல்ல, ஒன்றே என்பதை அவளுக்கு உணர்த்தினன். விக்னேஸ்வரப் பெருமான் வேதனுக்குத் தானும் கந்தனும் பரம்பொருளின் ஸ்வரூபமே என்பதை உபதேசித்த தினமே இன்று விநாயக சதுர்த்தி என மக்களால் கொண்டாடப்படுகிறது.

கற்பிற் சிறந்த காரிகையாம் வள்ளியைப் பரிசோதிக்கப் பல உருவங்களைக் கந்தன் கொண்டானே யன்றி வேறல்ல. அவள் யானையைக் கண்டபோது அஞ்சி "முருகா! முருகா! அபயம்! அபயம்! என்னைக் காப்பாற்றுக! முருகா! குமரா! குருநாதா!" என அலறினள். என்றென்றும் அன்பர்களை ஆதரிக்கும் கருணாகர கந்தன் தன்னை மறந்து உள்ளம் நெகிழ்ந்து அவளைக் காக்க மயிலின் மிசை ஆறுமுகங்களுடனும் பன்னிரு கரங்களுடனும் இடது புறத்தில் தேவ சேனை அம்மை விளங்க ஜோதி

---

கோளாய் நங்கை இளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளைய நீக்குமவன் கோளில் எய் பெருமானே

சொருபனுக் காக்ஷி யளித்தான். யானை மறைந்தது- "வள்ளி அஞ்சற்க! நின்னை நாயகியாய் ஏற்று அருளவே யாம் சோதித்தோம். எமது வலது புறத்தில் நீ அமரு, வாயாக!" என உரைத்துத் தன்னுடன் அவளை அமர்த்திக் கொண்டு மறைந்தான்.

இன்னும் முருகனது லீலைகளை ஆராய்வோமாயின் அவன் கருணை பொழியும் வள்ளலே என நன்கு அறிய லாகும். ஆகவே முருகன் அருள் வடிவம் என்று கூறத் தடை என்ன?

---

அநுபூதி விளக்கம்

# வளையும் தளையும்

(கி. வா. ஜ.)

மனிதன் அன்பைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பும் பல உண்டு. மனைவி யென்றும், மக்களென்றும், உற்றாரென்றும், உறவினரென்றும்; நண்பரென்றும், தோழரென்றும் பலரைத் தொடர்புபடுத்தி அந்த அன்பைப் பெருக்கிக் கொள்கிறான். அந்த அன்பு இறைவனுடைய அன்புக்கு இடையூறாக இருக்கக் கூடாது. மனைவியும் மக்களும் இல்லறத்தை நடத்தத் துணைவர்களாகவும், இறை வன் திருவடியன்பை வளர்க்கும் தோழர்களாவும் இருக்க வேண்டும். நல்ல அடியார் திருக்கூட்டத்தில் ஒருவன் சேர்ந்து பழகி விட்டால் அவனுக்குச் சிவபெருமான் திரு வருள் எளிதிலே கிடைக்கும். தன் வீட்டிலுள்ளவர் களையே அடியார்கள் ஆக்கி விட்டால் அவனுடைய வாழ்வு இம்மை மறுமைப் பயன்களை நிச்சயமாக அடைவதற்குத் தக்கதாகும்.

இவ்வாறன்றி மனைவி, மக்கள் என்ற நினைவும் அவர் களிடம் உள்ள பற்றும் பெரிய கடமையாகிய இறைவன் நெறி நிற்பதற்குத் தடையாக இருப்பதும் உண்டு. அப் போது அவர்கள் நம்முடைய முயற்சியைத் தடுக்கும் தளை களாகி விடுகிறார்கள்.

---

பாடரவத்து இசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவம் தீர்க்கும் அவன் கோளிலி யெம் பெருமானே

நாம் செய்யும் அறத்துக்குத் துணை நின்று தக்கவண்ணம் வாழச் செய்வதால் மனைவிக்கு வாழ்க்கைத் துணை என்று பெயர் வந்தது. இம்மை வாழ்வும் மறுமை வாழும் ஒன்றனோடு ஒன்று தொடர்புடையவை. இந்த வாழ்வில் அறம் செய்து வாழ்ந்தால் இறந்த பிறகு வரும் வாழ்விலும் இன்பம் உண்டாகும். மனைவியும் மக்களும் அறஞ் செய்யத் துணைவர்களாக இருந்தால் இம்மை, மறுமை என்னும் இரண்டு வாழ்க்கைக்கும் உதவி செய்தவர்க ளாகிறார்கள். இல்லையானால் நம்முடைய போக்கிலே செல்லவிட்டாலும் போதும். அப்படி இல்லாமல் அவரவர் தம் மனம் போன படி போய் ஒற்றுமையின்றி வாழ்ந்தால் அவர்களால் அந்த வீட்டுக்காரனுக்குத் துன்பமே உண்டாகும். தான் நினைத்த படி ஒன்றும் செய்ய முடியாது.

வளையை அணிந்த கையைப் பெற்ற மனைவி எப்படித் தன் கைக்கு வளையை அலங்காரமாகப் பெற்றிருக்கிறாளோ அப்படி மனைவி இல்வாழ்வுக்கு அணியாக விளங்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் கையில் மாட்டிக்கொண்ட விலங்குக்கு ஒப்பாவாள். வளைக்கும் விலங்குக்கும் வேறுபாடு சிறிதுதான். வளையை அணிந்த கரம் அழகு பெறும்; தான் செய்யும் வேலைகளுக்குத் தடையின்றி உரிமையோடு செய்யும். விலங்கை அணிந்த கரம் அப்படிச் செய்ய முடியாது. தனித்தனியே கையை வீச முடியாது. விலங்கும் வளையும் கையில் மாட்டப் பெறுவன ஆனாலும் விலங்கு ஒன்றனோடு ஒன்று இணைந்து கையால் ஒரு செயலும் செய்ய முடியாமல் ஆக்கி விடுகிறது. வளையோ தனித் தனியே இருந்து கையால் செய்யும் தொழிலுக்குத் தடை உண்டாக்குவதில்லை.

மாதர், வளை போல இருக்க வேண்டும்; விலங்குபோல, தளை போல இருக்கக் கூடாது.

"பெண்டாட்டி கால் விலங்கு
பிள்ளையொரு சுள்ளாணி"

என்று நாடோடிப் பாட்டில் வருகிறது. பொல்லாத மாதரையும் மக்களையும் பெற்ற அநுபவத்தில் எழுந்தது இது.

---

கன்றிவரு காலன் உயிர் கண்டவனுக்கு அன்று அளித்தான்
கொன்றை மலர் பொலன் திகழும் கோளிலி யெம் பெருமானே

அத்தகைய அநுபவம் கூடாது என்று இறைவனை நாம் வேண்டிக்கொள்ள வேண்டும்.

"வளையை யணிந்த கையையுடைய மனைவியோடு மக்கள் எனும் விலங்கு சேர்ந்தமையினால் நான் அழிய லாமா? இது எனக்கு ஏற்றதாகுமா?" என்று அருணகிரி நாதர் முருகனிடம் முறையிடுகிறார்.

வளைபட்ட கைம் மாதொடு மக்களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ?

[பட்ட-அமைந்த. தளைபட்டு-விலங்கு அமைந்து.]

## திருவொற்றியூர்

# திருப்புகழ் விரிவுரை

### (குகஸ்ரீ)

சொருபப்பிர காசவிசு வருபப்பிர மாகஙிச
சுகவிப்பிர தேசரச சுபமாயா
துவியப்பிர காசமத சொலியற்றர சாசவித
தொகைவிக்ரம மாதர்வயி றிடையூறு
கருவிற்பிற வாதபடி உருவிற்பிர மோதஅடி
களையெத்திடி ராகவகை அதன்மீறிக்
கருணைப்பிர காசவுன தருளூற்றிட ஆசில்சிவ
கதிபெற்றிட ஞானவயை ஒழிவேனோ;
குருகுக்குட வாரகொடி செருவுக்ர ஆதபயில்
பிடிகைத்தல ஆதியரி மருகோனே
குமரப்பிர தாபகுக! சிவசுப்பிர மாமணிய
குணமுட்டர வாஅசுரர் குலகாலா!
திருவொற்றியு ருமருவு நகரொற்றியூர் வாரிதிரை
அருகுற்றிடு மாதிசிவ னருள்பாலா!
திகழுற்றிடு யோகதவ மிகமுக்கிய மாதவர்கள்
இதயத்திட மேமருவு பெருமாளே!

---

தந்தைதனைச் சாடுதலும் சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர் கொடுத்தான் கோனிவியெம் பெருமானே

(குரு..........மருகோனே)

(பதவுரை:) குரு வார குக்குட கொடி - குரு ஒழுக்கம் கொண்ட கோழிக் கொடியையும்;

செரு உக்ர ஆதப அயில் - உறுத்த போரில் உக்கிர வெயில் வீசும் வேல் படையையும்:

பிடி கைத் தல - பிடித்த திருக்கரங்களை உடையவனே!

ஆதி அரி மருகோனே - ஆதியான மாதவனார் திரு மருமகனே!

(குமர..................காலா)

குமர - என்றும் பதினாறாக இருப்பவனே!,

பிரதாப குக - (கோவான) மகிமைக் குகனே!;

சிவ சுப்ர மாமணிய - சிறந்த சிவ சுப்ரமண்யனே!;

குண முட்டா-முட்டுப்பாடு விளைவிக்கும் குணம் முதிர்ந்தவரும்;

அவா அசுரர் குல காலா - பேராசை யுடையவருமான அசுரர் குலத்தை அழிக்கும் காலனே!

(திரு...............அருள் பாலா)

திரு ஒற்றி உரு மருவு நகர் ஒற்றியூர் - (எண்வகைத்) திருவும் தங்கித் தழுவும் பதியான திருவொற்றி யூரில்;

திரை வாரி அருகு உற்றிடும்-அலைகளை யுடைய கடலின் அண் மையில் அமர்ந்திருக்கும்;

ஆதி சிவன் அருள் பாலா - முதல்வரான சிவனார் அருளிய முருகா!;

(திகழ்..................பெருமாளே)

திகழ் உற்றிடு - என்றும் விளங்கி யிருக்கும்; யோக தவம் மிகு முக்கிய மாதவர்கள - (சிவராஜ) யோகத்திலும், தவத்திலும் மேம் பட்ட முக்கியமான சிறந்த முனிவர்களின்;

இதயதது இடமே மருவு பெருமாளே - இதய தகராலயத் திலேயே ஒன்றிதது இருக்கும் பெரிய பொருளே!;

(சொருப...........விக்ரம)

சொருபப் பிரகாச - (பெருகிய) சொருபப் பேரொளிப் பிழம்பே!;

விசுவ ருப-உலக (மான இயங்குதிணை, நிலைததிணை)உருவனே;

பிரமாக நிச சுக - (பிரமமெனும்) பெரிய பொருளாக உள்ள மெய்மைப் பேரின்ப மேலோனே!

---

பஞ்சவரில் பார்த்தனுக்குப் பாகபதம் ஈந்து உகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலி யெம் பெருமானே

விப்பிர தேச - (உயர்ந்த இதய) அந்தண ஒளியே!

ரச சுப -(மாபெரும்) சுவையான மங்களனே!.

மாயா துலியப் பிரகாச - அழியாத தூய அதி நுட்ப ஒளியே!

மத சொல இயற்று அரசா - சமய நூற்கள் (சால) இயற்றிய (கலை) அரசே!;

சவித தொகை விக்ரம - தொகைப் படுத்திக் கூறும் பரிதியர் என (வளர்ஒளி மயமாக) வரும் வலியோனே!;

(மாதர்.....இடரானவையை ஒழிவேனோ.)

மாதர் வயிறிடை ஊறு கருவிற் பிறவாதபடி - காரிகையர் வயிற்றில் ஊறுகின்ற கருப்பததில் (பேதையேன் தங்கிப்) பிறவா வண்ணம்.

உருவில் பிரமோத அடிகளை - (உமது) திருமேனியில் காதல் விளைவிக்கும் (கமல மலர்) அடிகளை;

எத்திடு இராக வகை அதில் மீறி - வாயார வாழ்த்துகின்ற ஆர்வ நெறிகளில் அளவின்றிச் சென்று;

கருணை பிரகாச - அருள பேரொளியே!

உனது அருள் உற்றிட-உன்னுடைய திருவருள் (வலிய வந்து என்னிடததில்) உறவு கொள;

ஆசு இல் சிவ கதி பெற்று - களங்கம் இலாத உயர் சிவ கதியை உரிமையுடன் எய்தி;

இடர் ஆனவையை ஒழிவேனோ - (அடியேன்) துன்பங்கள் அனைத்தையும் துறந்து (இன்பங் கொண்டு) இருப்பேனோ.(எ—று)

## விரிவுரை

உதய ஒளிமுன், இருள் ஒதுங்கும். அதுபோல், பேரொளிப் பிழம்பை உள்ளார ஊன்றி உணரும் சமயம், ஆணவ இருள் வலி அடங்கும். இதோ சிறக்க வருகிறது சிவஒளி யென்று, குரு மொழி போல், அங்கிலேயில் அருள நாதம் அறிவிக்கும்.

உடனே வெல்! வெல்! வெல்! வெல் என்று உடன் தொடர்ந்து எழுகிறது வேல். அப்படித்தான் இருக்கிறது, அதன் செயல்.

சொருபத்தில் நாதம்: தடத்த உருவில் குலவுகிறது சேவல் கொடி.

சொருபத்தில் ஞானம்; தடததததில் வேல். பேரொளி மய மான அவ்வேலும் சேவலும் பிடித்த காத்தனை, "குரு குக்குட வார கொடி செரு உக்ர ஆத(ப) அயில் பிடி கைத்தல" என அன்பொடு கூவி அழைத்தார்.

---

நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழு கோல் கோளிலி யெம் பெருமானே

அநியாயம் செய்வாரை அழிப்பார்; ஆதலின், திருமால் ஹரி யெனும் பெயர் பெறுவர்; அமரரில் முதல்வர்; தொண்டரின் தலை வர் என்பதை எண்ணி, அவரை ஆதியரி என்றார்.

ஆறுமுகப் பரன் ஆடலை யறிந்தார். சிறந்த கண் மழை சிந்தினர். அந்தத் துளிகள், இரு பெண்ணுருவாகிப் பிரகாசித் தன. அவ்விருவர்க்கும், அமுதவல்லி, சுந்தரி என்று பெயரிட்டார். அமுதவல்லியை, அமரர்க்கு மகளாக அளித்தார். சுந்தரியை, குறவர்க்கு மகளாகக் கொடுத்தார். அவர்கள் மூலம், இருவரை யும் மணத்தில் அளித்தார். முருகன், அமரர் மருகன்; குமரன், சவ ரர் மருகன் என்று எவரும் சொல்ல வைத்தார். மற்றவர்க்கு இப்படி மதிப்புண்டாக, மாபெரும் பணியை, தான் மறைந்து செய்தாரானலும், மால் மருகன் முருகன் என்று, அவரைப் போற்றி உலகம் புகழ்ந்தது. அதை யறிந்து,

**'ஆதி யரி மருகோனே'** என்று அன்புமிகுந்து அழைத்தார்.

கு-மலம்; மரன்-அழித்தவன்; குமர நாமத்திற்கு இப்படியும் ஒரு பொருள் உண்டு.

பிரதாபம் - மகிமை: பெருமை, பிரசித்தி எனினுமாம்.

குகன் - உயிர்களின் இதய குகையில் இருப்பவன்.

"வசையில் உயிருள் ளுறும் குகையும்
வதியும் இயல்பால் குகன்"

என்று இதனை, வேறு வகையில் விரித்துரைகின்றது விநாயக புராணம்,

"தண்முகத் துய்யமணி, உள்முகச் சைவமணி,
சண்முகத் தெய்வ மணி"யை

சிவசுப்ர மாமணிய என்று கூவியழைக்கும்அருமை கோடி பெறும், மா சிவ சுப்ரமணிய என இயைத்துப் பொருள் கோடல் நேரிது.

சிவ என்பதை ஒருதலை மாணிக்கம் என்பர். அதனி லிருந்து எழுகிறது சுப்ரமணியம். ஸு - இன்பம்; ப்ரஹ்ம - பெரிய பொருள்; ண்யம் - விளக்கும் ஒளி; எனவே, இன்ப பிரம ஜோதியை, சுப்ரமணியா என்று உருவேற்றினர் உள்ளம் உவகை பெறும்.

ஒரு மொழியில் ரகரத்தின் முன் நகரம் வருமேல், நகரம் ணகரமாய்த் திரியும் என்பது வடமொழி விதி. அதன்படி, அம் மொழியில் ந்யம் என்பது, ண்யம் என்று ஆயது.

---

**மின்னலினும் செஞ்சடையான், வெண்பொடியான், அங்கையினில்**
**கொன்னவிலும் சூலத்தான் கோலினி யெம் பெருமானே**

நலம் சிறந்த அந்தணரும், சுருதியும், வாழும் நம்மை வழிபடுவதால், நாம் பிரமணியம் ஆவோம். சுரர் அசுரர் முதலிய எவராலும் எண்ணப் படுதலின், நம் முருகன் சுப்பிரமணியன் ஆயினன் என்று, உமா தேவிக்குச் சிவம் உரைத்ததாக, குதூகலித்து ஒரு குறிப்பைக் கந்தம் கூறுகின்றது.

ராஜச தாமஸர் அசுரர்; சத்வ குணச் சார்பிலாதவர் ஆதலின், அவர் குண முட்டர் ஆயினர். முடைப்பட்ட குணிகள் அந்த மூடர்கள். பேராசைப் பேய் நலிய, வானவர் வாழ்வை வலிந்து கவர்ந்தனர்.

மா துக்கம் தீர்ந்து சாதுக்கள் வாழ, தானவர் குலத்தைத் தடிந்தானை,

குமரப்பிர தாபகுக! சிவ சுப்ர மாமணிய!
குணமுட்டர் அவா அசுரர் குலகாலா!

என்று அழைக்கும் அருமையே அருமை.

திருவொற்றியூர் எனும் பெயரே, திருமகள் நிகேதனம் அது எனலைத் தெரிவிக்கின்றது.

ஆதி யரி மருகா, ஆதி சிவன் அருள் பாலா என்று பலதரம் சொல்லிப் பாருங்கள்! ஓதும் நாவில் சுரப்பு ஊறுகின்றதே!

யோகமும் தவமும் உடைய மாதவர்களே இவ்வுலகிற்கு என்றும் தேவை. இடையறுது அவர்கள் தன்னை எண்ணுகின்று ராதலின், அவர் இதயத்தில நீங்காது இருப்பவனே என்ற பொருளில்,

'இதயத்திடமே மருவு பெருமாளே' என்றார்.

சொருபம் - அநுபூதியில் புலனுகும் அறிவு நிலை; அது தத்துவம் கடந்தது; எம் மதங்கட்கும் எட்டாதது; குணமும் குறியும், இல்லாதது; ஆன்ம அறிவிற்கு அறிவா யிருப்பது; இறப்பும் பிறப்பும், நினைப்பும் மறப்பும் நேராதது; அருள வழியால் ஐந்தொழில் நிகழ, ஒட்டாது எதனிலும் ஒன்றுவது. அச் சொருபம், இயல்பில் ஒளிர்வது ஆதலின், சொருபப் பிரகாச என்றார்.

விசுவ ரூபம்-உலக உருவம்; விஸ்வம்- உலகம், உலகானன்; உலகிற்கு உயிரானன்; உலகைக் கடந்தும் உளன் எனும் பொருளில், விஸ்வரூபன், விஸ்வாந்தர்யாமி, விஸ்வாதிகன் என, ஏதமிலாத வேதம் இறைவனை என்றும் ஏத்துகின்றது.

சொரூபப் பிரகாசம், விஸ்வ ரூபமாக விளங்குவதால் தான், அதை ஓதவும் உணரவும் இயல்கிறது.

---

மந்திரத்த மறைபாட வாளவனுக்கு ஈந்தானும்
கொந்தரத்த மதிச் சென்னிக் கோளிலி யெம்பெருமானே

பிரமம் ஆக என்பது, பிரமாக என நின்றது. பெரிய பொருளைப் பிரமம் என்பர் பெரியோர்.

சதானந்த பாத்தை, நிஜ சுகம் என்பது நினைக்கத் தக்கது. பிணைந்து கலந்த பின், பிரிவு தருவன உளவெனில், அதன்வழி வருவது சிற்றின்பம். அணைந்து கலந்த பின், அத்வைதம் ஆவது பேரின்பம். அதை ஏட்டில் விரிக்க இடமில்லை.

ஊன்றி உணர்ந்தால், உய்தி பிறக்கும். சொரூபம்-முளை; விசுவ ரூபம்-விதை; பிரமமாக இருந்த நிஜ சுகம், உயிர்கட்குத் தன்னை உணர்த்த, விப்ர தேஜசாக விளங்குகின்றது. இது குரு முக மான கோலம்; தருவா யெழுந்த தனி நுட்பம்.

அதன் உபதேசம்,ரச சுப அநுபவம்; மற்ற உபதேசங்கள் எல்லாம் விரசமான அமங்களமே.

உபதேசத்தின் பின், அநுட்டானத்தில் மாயா துல்ய பிர காசம்; மலரும் இது, ஏற்றி வைத்தபின் அணையாத இதய தீப இருப்பு.

"பொதிய முனி யகத்துப் பொங்கும் இருள் விலக்க
விதியும் அறியா விளக்கேற்றும் தேசிகனே"

என்று அருமைப் போரூர் அடிகளும்,

"ஆபத்தை நீக்கி வளர்த்தே—சற்றும்
அசையாமல் அவியாமல அடியேன் உளத்தே
தீபத்தை வைததது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திகழ் நடஜோதி"

என வடலூர் முனிவரும் சமிக்ஞை காட்டுவது, ஊன்றி இங்கு உணரத் தகும்.

இந்நிலையை எவரும் ஓதலாம்; உணரலாம்; இங்கு சமய வாதி களின் மோதல் இராது.

எல்லார்க்கும் பரிபாகம் ஒரே விதமாக இருப்பதில்லை. நடந்த நிலையை, அவர்கள் தம் மதிநிலைக்குத் தக்கவாறு மதிக்கலாயினர். மதி நிலைக்குத தக்கபடி, பேசும்மதங்கள் பிறந்தன. சமய நூல்களும் எழுந்தன, நூல் செய்தார் பெயர், நூல் முகப்பில் நிற்கும். அவர் களா அதை ஆக்கினார்கள்? ஒருநாளும் இல்லை. இனிய அவர்கள் இதயத்தில் இருந்து, அந்த அந்த நூற்களை ஆக்கியது, சொருப நடந்த ஜோதி. உரைதத அந்நூலின்படி ஒழுகினால், படிக்கிரம

---

*பாணன் இசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்*
*கோணல் இளம் பிறைச் சென்னிக் கோளிலியெம் பெருமானே*

மாகி, உணர்வை யருளி, அதுவே அவர்களை உயர்த்திவிடும். இந்நிலையை எண்ணி, "மத சொல் இயற்று அரசா" என்று, விமல அந்த ஒளியை விளிக்கலாம் அல்லவா! சொல்-ஆகுபெயராய் நூலை உணர்த்திற்று.

மற்று, சமய ஒரு மொழி உதவிய சிவலோக சாம்ராஜ்ய சக்ரவர்த்தியே என்று இங்குப் பொருள் கோடலும் ஒருவகை.

"உததிமிசை கடவுமா கதவருண குலதுரக
உபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென யுக முடிவின் இருளகல ஒரு சோதி வீசுவது"

ஆன அத் தெய்வ இயல்பை,

**சவித தொகை விக்ரம!**

என்று அன்பொடு கூவி அழைக்கலாம். சவிதா - சூரியன்; தொகை - அளவிலாமையை அறிவித்தது. விக்ரமம் - பேராற்றல்.

## என் கதை என்ன?

ஊதுகாய்ப் பாண்டததில ஊறுகாய் ஊறுவது போல, எத்தனையோ பேதையர் கருவில் ஊறிப் பிறந்தேன். இருந்தேன்; படாத துன்பம் பல பட்டேன்; இறுதியில் வீணே இறந்தேன்.

"படமுடியாது இனித் துயரம்; பட்டதெல்லாம் போதும்"
என்று, வாய்ப்பாட்டு முறையில் ஓயாது ஓதுவதால் பயனில்லை. இருந்து பிறக்கும் இடத்தை எண்ணுகின்ற வரைக்கும், இறப்பும் பிறப்பும் இருக்கும் திண்ணம். ஆர்வம், கருக்குழியை ஆறுக வைக்கும்; துதித்து மகிழ்ந்து, தோகையரையே தொழச் செய்யும்; பயனாய் விளைவது பவகதிதான்.

காணத் தக்க உன் திருவடிகளில், காதல்வேண்டும். பாராயணப் பெயரால் ஏதநித் துதித்தல் என்றும் நலம்தரும். அதன்பின், கருணை நிறைந்த உன் திருவருள, கரை யேறும்படிக் கை கொடுக்கும்; கவலை மாயும், சிவகதி விளையும்; "அவனருளாலே அவன் தாள வணங்கி" என்று ஆன்றோர் இனிது அறிவிக்கின்றார்; பிரபோ! அந்த இனிய அருளை அருள் என்று, விநயமொடு நின்று விண்ணப்பித்தபடி.

**வாழ்க திருப்புகழ வளம்!**

---

*நடுக்கமிலா அமருலகம் தன்னையுமாம் அன்னன் கழல்*
*கொடுக்கவிலா வரம்கொடுக்கும் கோனிவியெம்பெருமானே*

## The World - Mother

The mothor is a divine entity, wherever she may be found. She fills the world with her divine love and solicitude for the jivas. She is *the personification of the Brahmam of the Upanishads.* The great Adi Sankara instructs us into her true nature. The Sabda-brahmam of which the universe is made, is of her. Even so, are the moving and unmoving entities of creation. She is of light, the sun, moon, the stars and all else where light is found. She is the speech, the word, *its meaning and the heavenly light within it,* which people call understanding. She is of Ananda Eternal. She is gnana, in fact the essence of creation, the single entity that is of the worlds, and rules the same. In Her are established the worlds of creation. She is riches worldly and spiritual. Her grace sustains the world. Her threefold manifestation as Durga, Lakhmi and Saraswathi is the threefold manner in which her grace takes shape. In *fact Her manifestations* are countless. Happy is he who is able to discover Her Grace everywhere in the world. There is no life extant of which she is not the effective cause. She is the All Life—the life of all lives. The air we 'breathe, the food that is grown and harvested, the blessings of the seasons, the sun, the moon and the stars all are *created* and sus-

tained and directed by her. The Navaratri celebrations are the outpourings of human gratitude to the world mother. On her lap the bakta will discover a child form which he can easily ascertain .to be Parasakti-Putra. The mother and child are one.

The realisation of the world mother will mean the realisation of the mahavakyas of the four Vedas. The mother worship is universal and is bound to be as universal as Her own divine nature. Lover of the mother is of the same class as Bakti or the love of God. One entity rules the world. To think of it in terms of the mother of all creation is an easy means of establishing the essential truth of Universal Brotherhood. May the world realise that the Divine .Mother is one, and in the light of that truth attain to greater and greater degrees of universal brotherhood and peace and their effective practical expression in life.

*—Thiruppugal Mani*

— 363 —

18582

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா;
ஈண்டொளிசேர் கங்கைச் சடையாய் என்றும்
சுடர்ஒளியாய் உள்விளங்கு சோதி என்றும்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா என்றும்
கடல்விடமது உண்டு இருண்ட கண்டா என்றும்
கலைமான் மறிஏந்து கையா என்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஊதுவத்தி
நெ. 1506

-364-

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO, (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்) | | | |
| சிவநேயச் செல்வர்கள் ,, ,, | | | |
| கணபதி பக்தர்கள் ,, ,, | | | |
| முருகனடியார் ,, ,, | | | |

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18